மூலிகை மணி

மலர் 15 | காளயுக்தி - பங்குனி
சித்தார்த்தி - சித்திரை | இதழ் 5-6


ஆசிரியர்; வேலூர் மருத்துவர் ஜி. இரா. கண்ணப்பர்



"ரோஜா" 225-வது மூலிகை

விலை ரூ. 1-50

மூலிகை மன்னர் அமரர் ஆனுர்!



எங்கள் குடும்பத்தின் உயிராய்த் திகழ்ந்தவர்;
சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பிரசார பீரங்கியாக முழங்கியவர்.
'மூலிகை மருத்துவம்' எனும் புதியதொரு மருத்துவ முறையைத்
தமிழகம் எங்கும் 20 ஆண்டுகளாகப் பரப்பி வந்தவர்;
எங்கள் தந்தையார்
மூலிகை மணி ஆசிரியர், மூலிகை மன்னர்

வேலூர் டாக்டர் **ஏ. ஆர். கண்ணப்பர்,** R.M.P.

அவர்கள், 1-9-'79 அன்று எதிர்பாராத நிலையில்,
அமரர் ஆனுர்; எனும் துயரமான செய்தியை—
காலம்கூட ஆற்றமுடியாத
ஆழ்ந்த வருத்தத்துடன் வாசகர்ட்குத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

—மூலிகை மணி குடும்பத்தினர்.

வஞ்சமே நெஞ்சமான மரணதேவா!

மதி மயங்கினையோ? மலரைப் பறித்தனையோ?

மூலிகை வளமே! நாட்டு வளம்!!

என்று 20 ஆண்டுகாலமாகத் தமிழகமெங்கும் ஒலித்து வந்த அந்த ஓர் உயிரைப்பறிக்க உனக்கென்ன துணிச்சல்!

எங்கள் ஊன், உள்ளம், உயிரெலாம் நிறைந்து, மூலிகைமணியின் புகழைப் பாடும் பணியை அளித்து வந்த அந்த உத்தமனின் உயிரைப் பறிக்க உனக்கென்ன உன்மத்தமா?

பைத்தியமே!

அந்த உன்மத்திற்கு மருத்துவம் செய்யும் தகுதி அவருக்குண்டு எனும் காரணத்திற்காகவா, உன் இல்லம் அழைத்துச்சென்று எங்களை உன்மத்த நிலைக்கு ஆளாக்கி விட்டாய்!

அற்பனே!

அறுபது ஆண்டுகள் கூட ஆகவில்லையே எங்கள் தந்தைக்கு! அதற்குள் உனக்கேன் அவசரம்?

யாருக்கு என்ன தீங்கு செய்தார்?

யாரும் கேட்பதற்கில்லையென்று மதி மயங்கினையோ!

மூடனே!

நூறாண்டு காலம் அவர் வாழ்ந்திருந்தால், நூறுயிரம் மக்களின் நல்வாழ்வுக்கு வழி கூறியிருப்பாரே!

உலகெலாம் மூலிகைவளம் பரவவேண்டும் என்பதற்காக, **'Herbs and Health'** எனும் இதழினை ஆங்கிலத்தில் வெளியிடத் திட்டமிட்டு, அடுத்த மாதம் வெளியிட முனைந்து செயல்பட்டுவந்தாரே! அந்த நற்செயலை நிறைவேற்ற முடியாமல், அவர் உயிரைப் பறித்து—தீராப் பழியை ஏற்றுக் கொண்டாயே!

பாவியே! 'மூலிகையின் புகழ்'
'சித்த மருத்துவத்தின் சிறப்பு'
'மக்கள் நல்வாழ்வு' பற்றியே தன் வாழ்நாள் முழுதும் சிந்தித்த எங்கள் தந்தையை—

அகாலமாக, அநீதியாக
பறித்துக்கொண்டு—எங்களை பரிதவிக்கவிட்ட பாவியே!

உன்னை என்றைக்காவது ஒருநாள் சந்திப்பேன்.
பழி தீர்ப்பேன்!

—க. வே.

மூலிகை மணி கண்ணப்பரின்
வாழ்க்கைக் குறிப்புகள்

மருத்துவப் பரம்பரை

வடாற்காடு மாவட்டம் வேலூரிலுள்ள புகழ்பெற்ற கலாஸ் பாளைய மருத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் பாட்டனுர் திரு. அய்யாவு முதலியார் மிகச்சிறந்த வைணவ பக்தர். இவர் தந்தை திரு. ராமகிருஷ்ண முதலியார் மிகச்சிறந்த சர்ம நோய் நிபுணர். 'கீச்சுக்குரல் காப்புக்கார வைத்தியர்' என்று இவரை ஊரெங்கும் அழைப்பர். காஞ்சி புரத்திலுள்ள தேவதாசிகள் இவரை இரட்டை குதிரை பூட்டிய சாரட்டு வண்டியில் அழைத்துச்சென்று வைத்தியம் செய்துகொள்வார்களாம்.

பிறப்பு

9—7—21-இல் ஆசிரியர் அவர்கள் திரு. இராமகிருஷ்ண முதலி யார் அவர்களுக்கும் திருமதி சாரதாம்பிகைக்கும் தலைமகனுக அவதரித் தார். பிறந்த பத்தாம் நாளிலேயே தந்தையை இழந்தார். மூன்ருண்டு களில் தாயை இழந்தார்.

வளர்ப்பு

தாயின் தமக்கையான பெரியன்னை திருமதி ஜீவரத்தினம்மாளின் அரவணைப்பில் ஏழாவது வகுப்புவரை கல்விபயின்ற கண்ணப்பர் மேலும் பயில வாய்ப்பின்றி அச்சுத்தொழிலில் வாழ்க்கையைத் துவக் கினுர். அதன்பின்னர் சைக்கிள் ஷாப், மோட்டார் மெக்கானிக், சோடா கலர் வியாபாரம், அட்டைபெட்டி தயாரித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு சுயமுயற்சியில் முன்னேறி, தமது மனத்திற்கு இனிய, உறவினர் மகளான சகுந்தலாவை மகிழ்ச்சியுடன் தமது 19-வது வயதில் மணம் புரிந்தார்.

மருத்துவத்தில் ஈடுபாடு

21-வது வயதில் தமது தந்தையின் பால்ய நண்பர் "கூவத்தான் வைத்தியம்" திரு குமாரசாமி செட்டியார் அவர்களிடம் முறைப்படி தன் குலத்தொழிலைத் துவங்கி தன் முயற்சியாலும் வேலூர் சைதாப் பேட்டை திரு சுப்பிரமணிய முதலியார் அவர்களின் நட்புறவாலும் காடு, மலை, மேடு என்று அலைந்து திரிந்து மூலிகைகளின் அறிவைப் படிப்படியே பெற்ருர். பற்பல சித்தர்கள் தொடர்பும் கிடைத்தன.

நம்நாட்டு மூலிகைகள் உதயம்

1960ல் முதன் முதலாக "மாத ஜோதிடம்" என்னும் மாத இதழில் "நம் நாட்டு மூலிகைகள்" என்னும் தலைப்பில் மூலிகைகள் பற்றிய தொடர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். இடையே வேலூர் ஹோமியோபதி டாக்டர் டேவிட் அவர்களிடம் ஹோமியோ பதி மருத்துவ முறையையும் கற்று நன்கு தேர்ச்சி பெற்ருர்.

1962-ல் ''கதிர் வெங்கட்ராமன்'' அவர்கள் மூலம் தினமணிச் சுடரில் தமிழக மக்களுக்கு அறிமுகமானுர். தொடர்ந்து திரு K.S.V. ரமணி அவர்களின் ஊக்கத்தால் தினமணியில் 10 ஆண்டு காலம் மூலிகை ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வந்தார்.

1963 முதல் 'ஸ்ரீ முருகன் சித்த வைத்திய சாலை' எனும் பெயரில், மருத்துவமனை நடத்திவரலானுர்.

மூலிகை மணி தோற்றம்

1964 நவம்பர் மாதம் மூலிகைக்கான ஒரு மாத இதழை ''மூலிகை மணி'' என்ற பெயரில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் திருக்கரத்தால் வெளியிட்டார்.

1968.ல் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் சித்த மருத்துவ கண்காட்சி அமைப்பதற்குப் பேருதவியும் உழைப்பும் நல்கி தமிழக அரசின் பாராட்டினைப் பெற்ருர்.

1971-ல் 'மூலிகைமணி மருத்துவமனை' எனும் பெயரில், வேலூரில் மருத்துவமனையைத் தொடங்கி, எரிகுன்மம் (Peptic Ulcer), மேக நோய்கள் (Psoriosis). வெண்மேகம் (Leucoderma) மூலம் (Pils) ஆஸ்த்துமா (Asthma) போன்ற நோய்களுக்கு ·மருத்துவம் செய்து வந்தார்.

1974-ல், 'காட்ராக்ட்' எனும் கண்நோய்க்கு 'நேத்திரப் பூண்டுத் தைலம்' தயாரித்து அதில் பூரண வெற்றிபெற்ருர்.

கடந்த ஐந்தாண்டுகளில் நூற்றுக்கணக்கான கண் நோயாளிகளைத் இந்த தைலம் மூலம் குணப்படுத்தி, 'கண் கொடுத்த கண்ணப்பர்' எனும் சிறப்பினைப் பெற்ருர்.

1975 முதல் சென்னையில், மருத்துவத்தொழிலை விரிவுசெய்தார்.

'மகா மூலிகை எண்ணெய்' எனும் இவரின் சொந்தக் கண்டு பிடிப்பு, சர்ம நோயாளிகட்கு வரப்பிரசாதமாயிற்று.

'மூலிகைக் காயகல்பம்' எனும் கல்ப மருந்து, இல்லற வாழ்வில் ஈடுபட்டவர்க்கு இணையற்ற வகையில் உதவியது.

ஆஸ்த்துமா, மூலம், சர்ம நோய், காட்ராக்ட்—நோய்களைத் தீர்ப்பதில் நிபுணத்துவம் பெற்று, அந்த நோய்களைத் தீர்ப்பதில் கைராசி பெற்றவர் என அழைக்கப்பட்டவர்.

மூத்த மகள் வசந்தா சகஜானந்தம் அவர்களை, சித்த மருந்தாளுநராகப் பயிற்றுவித்தார்.

1975-லிருந்து தன் மூத்தமகன் திரு. க. வேங்கடேசனை தனக்குப் பின், தன்னைப்போல் இத்துறையில் சேவைபுரியும் வகையில், அ.மு. பரமசிவானந்தம், டாக்டர் சஞ்சீவி, டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் ஆகிய பேராசிரியர்கள் உதவியால், 'சித்த மருத்துவ இலக்கியம்' பற்றிய ஆராய்ச்சியில் பி.எச்டி. பட்டம் பெறுமாறு பல்கலைக் கழகத்தில் சேர்த்தார். அவர் ஆய்வு நிறைவெய்தும் நிலையில் உள்ளது.

இளைய மகன் க. பாபு, இளைய மகள்கள் மாலா, ராணி, தமிழ்ச் செல்வி ஆகியோரை மருந்து தயாரிப்புத் துறைகளில் தேர்ச்சி பெறச் செய்துள்ளார்.

1979 பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி, இறுதி நாட்கள் நெருங்குவதைத் தன் தீர்க்க தரிசனத்தால் உணர்ந்த அவர், தன் சந்ததியினர் தனக்குப் பின், இத்துறையில் தொடர்ந்து எப்படியெல்லாம் சேவை புரிய வேண்டும் என்பதை விளக்கிக் கடிதம் எழுதி, தன் மூத்த மகனிடம் சேர்ப்பித்துவிட்டு, பல்வேறு திருக்கோயில்களுக்கு யாத்திரை சென்ருர்.

கடந்த 1—9—79 அன்று காலே 6 மணியளவில், மிகவும் அமைதியான முறையில், எதிர்பாராத நிலேயில், மாரடைப்பு காரணமாக வானுலகு எய்தினுர்.

சான்ருேர் நினேவில் ஆசிரியர் கண்ணப்பர்

1. 1964இல் அவர் குருநாதர் கூவத்தான் குமாரசாமி செட்டியார், 'வைத்திய சித்தர்' என்று சிறப்புப் பெயர் அளித்தார்.

2. 1967இல் காஞ்சி ஆச்சார்யாள், 'மூலிகைச் சக்ரவர்த்தி' என்று சிறப்புப் பட்டம் அளித்தார்கள்.

3. 1968இல் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் 'மூலிகை மன்னர்' என்றழைத்தார்.

4. 1971இல் கோவை விஞ்ஞானி G. D. நாயுடு அவர்கள், இவர் பணியைப் பாராட்டி 'ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய பணியை கண்ணப்பர் தனி மனிதனுக இருந்து சாதித்து வருகின்ருர்' என்று மனம் திறந்து போற்றினுர்.

5. 1972இல் கோவை மாவட்ட வாசகர்கள் பொன் விழா கொண்டாடி 'மூலிகை மருத்துவத் தந்தை' என்று பெயர் சூட்டினர்.

6. 1975 முதல் பல்வேறு சித்த மருத்துவ சங்கங்கள் 'சித்த மருத்துவக் காவலர்' என்று சிறப்பு செய்தன.

7. வாசகர்கள் அன்புடன் 'கண் கொடுத்த கண்ணப்பர்' என்று அழைப்பர்.

8. 1977இல் குமுதம் இதழாசிரியர், கேள்வி—பதில் பகுதியில் கருத்துரைக்கையில் 'மூலிகைகளுக்குத் தலே இருந்தால் கண்ணப்பரைத் தலேயில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடும்' என்று சிறப்புச் செய்தார்.

9. ஆற்றிய பணிகளேப் போலவே பெற்ற சிறப்புகளுக்கு எல்லேயில்லே. அவுர் ஆன்மாவை நன்குணர்ந்த தினமணி ரமணி அவர்கள் கூறியதுபோல் 'எதிர்காலத்தில் வரப்போகும் ஒரு Historian தான், கண்ணப்பரின் சித்த மருத்துவப் பணியை நுட்பமாக Assess செய்ய முடியும்.

வாழ்க அவர் திருப்புகழ் !
வளர்க அவர் திருப்பணி !!

காத்திருக்கின்றோம்-கரம் கொடுங்கள்

வாழ்நாள் முழுதும் மூலிகைகளின் மேல் தீராப் பற்றுக் கொண்டிருந்த கண்ணப்பர்

நினைத்த நினைவெல்லாம் மூலிகைகளைப் பற்றி !
செய்த செயலெல்லாம் மூலிகைகளைப் பற்றி !!
கண்ட கனவெல்லாம் மூலிகைகளைப் பற்றி !!!

சுருக்கமாகச் சொல்லப் போனால்;

"தூணிலும் துரும்பிலும் இறைவனைக் கண்ட புராணகால மக்களைப் போல், கல்லிலும் செம்பிலும் இறைவனைக் கண்ட இடைக் கால மக்களைப் போல், ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணப் புகுந்த பகுத்தறிவு வாதியைப் போல், இந்த மூலிகை மன்னரும் மூலிகையின் அசைவிலே; அவைகள் மக்கட் சமுதாயத்திற்குத் தரும் நன்மையிலே இறைவனைக் கண்டார் !"

ஆம்! அருகம் புல்லிலே விநாயகனையும், சுக்கிலே சுப்பிரமணியனையும், வில்வத்திலே சிவபெருமானையும், வேம்பிலே பராசக்தியையும், வல்லாரையிலே சரஸ்வதியையும், துளசியிலே மகாவிஷ்ணுவையும் காணும் உளப்பாங்கு பெற்ற அவர், இப்பரந்த உலகில் தனக்கென தனியொரு 'மூலிகை உலகத்தை' ஏற்படுத்திக்கொண்டு அதில் தமிழக மக்களை உலா வரச் செய்தார்.

மூலிகைகளைப் பற்றி ஓய்வின்றி சிந்தித்த அவர் உள்ளம் 1—9—79 அன்று ஓய்வெடுத்துக்கொண்டது; என்றாலும் அந்தச் சிந்தனை,

எங்கள் ரத்தத்தில், எங்கள் மூச்சில், நாடி நரம்புகளில்

கலந்திருக்கின்றது. கண்மூடித் திறப்பதற்குள் காலன் பறித்துவிட்ட, எங்கள் ஒப்பற்ற தந்தையின் சிந்தனைகளை-கனவுகளை உங்கள் ஆதரவுக் கரம்பற்றி செயலாற்றுவோம் !— நனவாக்குவோம்.

'மூலிகைமணி'-இதழ், தொடர்ந்து அவர் மூத்த மகன் **திரு. க. வேங்கடேசன்**, எம்,ஏ., அவர்களை ஆசிரியராகக் கொண்டுதொடர்ந்து வருவதுடன், மருத்துவ சிகிச்சையையும் அவர் தொடர்ந்து அளிப்பார் என்பதைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூலிகைமணி ஆசிரியர் **கண்ணப்பரைப்**பற்றிய பல்வேறு எண்ணங்கள், அனுபவங்களை வாசகர்கள் எழுதி 'மூலிகை மணி' அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

---

1. மூலிகை மருத்துவம் (Herbal Treatment)
2. மூலிகை ஆராய்ச்சி (Herbal Research)
3. மூலிகைகள் பற்றிய நூல்கள் வெளியீடு (Herbal Publication)

எனும் மூன்று நிலைகளில் தொடர்ந்து தமிழக மக்களுக்கும், உலக மக்களுக்கும் ஆசிரியர் கண்ணப்பர் காட்டியுள்ள வழியில் சேவை புரியக் காத்திருக்கின்றோம்.

அதற்குத் தேவை—வாசகர்களாகிய உங்கள் ஆதரவுக் கரம் ஒன்றே !

பணிபுரிய காத்திருக்கின்றோம். ஆதரவு கரம் கொடுங்கள்!!

—மூலிகைமணி குடும்பத்தினர்

உ
சண்முகம் துணை



கந்தா உனைப் பணிந்தேன்

பல்லவி

கந்தா உனைப்பணிந் தேன்—இரு
கரமது கூப்பியே காத்தருள் வாய்எனைக் (கந்தா)

அனுபல்லவி

தந்தையும் தாயும்நீ தவிர்த்தேன் கவலையை
தந்தேன் உடல்பொருள் ஆவியை உனக்கே!
(கந்தா)

சரணம்

பந்தபா சம்நீக்கி உனதுநா மம்எனும்
பந்தமே சொந்தமாய் பணிவுடன் கொண்டேனே!
எந்த அல்லல்வரினும் இன்முகத் தோடுநான்
இருப்பேன் அவற்றினை ஏற்பது நீயன்றோ! (கந்தா)

சரணமென் றுன்னிடம் தஞ்சம டைந்தோரைத்
தாயன் புடன்நோக்கி அவர்மன தில்உள்ள
மரண பயம்நீக்கி ஆட்கொண் டருள்வாயே!
வள்ளி மணவாளா! புள்ளி மயிலோனே!

—ஏ. பழனிச்சாமி B.A., B.T.
கோயம்புத்தூர்-26.

ஓலைச்சுவடியிலிருந்து...

க. வே.

நாய்க்கடி நஞ்சு முறிய

மணத்தக்காளி இலைச்சாறு எடுத்து, மிளகு 6 இடித்து அதில் கலந்து காலை, மாலை 100 மில்லி அளவு மூன்று நாட்கள் குடித்து, உப்பில்லா உணவுப்பத்தியம் 6 நாட்கள் இருந்து—7-வது நாள் தலை முழுக்கு செய்துவர, நாய்க்கடி நஞ்சு முறியும்.

வெள்ளை, வெட்டை விலக

வில்வ இலைச்சாறு	*100 மில்லி*
பசு நெய்	*50 ,,*
கற்கண்டு	*50 கிராம்*

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய்போல் திரண்டு வருவதை வழித்தெடுத்து எலுமிச்சங்காய் அளவு காலை மாலை இருவேளை உண்டுவர, வெள்ளை வெட்டை நோய்கள் விலகும்.

பித்தக் காய்ச்சலுக்குக் குடிநீர்

நெல்லி முள்ளி
வில்வப்பழச்சதை
சீரகம்
சுக்கு
சித்தாமுட்டி
நெற்பொரி

இவற்றை சமஅளவு எடுத்து இடித்து 2 குவளை நீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டி, தேன் 1 டீஸ்பூன் விட்டு 100 மில்லி அளவு காலை மாலை இரவு என மூன்று வேளை மூன்று நாட்கள் பருகிவர, பித்தக்காய்ச்சல் விலகும்.

தேகத்தில் ஏற்படும் குத்தல் குடைச்சலுக்கு

பூண்டு	*50 கிராம்*
நொச்சிவேர்	*50 ,,*
வசம்பு	*35 ,,*
தழுதாழைவேர்	*35 ,,*
வாலுழுவை	*50 ,,*

இவற்றை இடித்து, தூள் செய்து கொள்ளவும்.

நல்லெண்ணெய்
வேப்பெண்ணெய்
விளக்கெண்ணெய்

இவை யாவும் வகைக்கு 200 மில்லி அளவு எடுத்து ஒன்றுகக் கலந்து கொதிக்கும்போது, மேற்கண்ட மருந்துக் கலவைத் தூளைகலந்து காய்ச்சி, கடுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு, வாரம் இரு நாட்கள் உடலுக்குத் தேய்த்து மஸாஜ் செய்துவர, கைகால் திரேக குத்தல் குடைச்சல்கள் நீங்கும்.

உ

முருகா

ஐந்துகரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்று கின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

ஆசிரியர் : வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர், R.M.P. (Ind.)

நிர்வாக ஆசிரியர் : க. வேங்கடேசன், எம்.ஏ.,

மலர் 15] காளயுக்தி பங்குனி — சித்தார்த்தி சித்திரை [இதழ் 5 & 6

March & April 1979

முக்கிய வேண்டுகோள்

மூலிகை மணிக்கு வளர்ச்சி நிதி

மூலிகைகளின் புகழைப் பாடுதற்காக, உலகிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பட்டு, கடந்த 15 ஆண்டுகளாகப் பல நெருக்கடிகளுக்குமிடையே பொலிவோடு நடத்தப்பட்டுவரும் ஒரே இதழ் 'மூலிகை மணி' மட்டுமேயாகும்.

மூலிகைகளின் பயன்களைச் சித்த வைத்தியர்கள் மறைத்துவிட்டார்கள் என்ற முணுமுணுப்பைத் தகர்த்தெறியும் வகையில்,

மாத ஜோதிடம், தினமணி, மூலிகை மணி, குங்குமம், மக்கள் செய்தி

போன்ற பிரபல இதழ்களில் தொடர்ந்து கடந்த 20 ஆண்டுகளாக மூலிகைகளின் அளப்பரிய பயன்களை வெளியிட்டு வருகின்றோம்.

225 விதமான மூலிகைகளின் வண்ணப் படங்களுடன் அவற்றின் வகை வகையான மருத்துவக் குணங்களைத் தெளி

வாக, எல்லோரும் பயன்பெறும் வகையில் 'ஒளிவு மறைவு இன்றி' வெளியிட்டு வருவது 'மூலிகை மணி' ஒன்றே.

மூலிகைகளை, பாமரமக்களும் பயன்படுத்திப் பல அரிய நோய்களை யும் குணப்படுத்திக் கொண்டுள்ளமையை 'அனுபவம் உணர்த்தும் உண்மை' எனும் பகுதியில் அறியலாம்.

இவ்வளவுக்கும் மேலாக சித்த மருத்துவ வளர்ச்சிக்கு எனப் பல அரிய திட்டங்களை அளித்து மக்கள் மன்றத்தில் மாமணியென ஒலித்துவருவது மூலிகைமணி ஒன்றே.

முதிர்ந்த அனுபவமும், துடிப்பான ஆராய்ச்சியும் இணைவதுபோல் ஆசிரியர் கண்ணப்பரின் அனுபவமும், அவர் மகன்கள் திரு. க. வேங்கடேசன், திரு. க. பாபு, மகள் திருமதி வசந்தா சகஜானந்தன் ஆகியோரின் ஆராய்ச்சி அறிவும் இணைந்து செயல் படுவதால், மூலிகை மணி இதழ் மென்மேலும் பொலிவோடும், கருத்துச் செறிவோடும் வெளிவருகிறது, வந்துகொண்டிருக்கும்.

திரு.க. வேங்கடேசன் அவர்கள், இத்துறையில் பிஎச்.டி., பட்டத்திற்கு ஆய்வு செய்துவருவதுடன்,

மேகநோய், ஆஸ்த்துமா
குன்மநோய்
வெண்மேகம்

போன்ற நோய்களுக்குரிய தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டு வருகின்றார்.

சித்த மருத்துவ வளர்ச்சியில் தீவிரப் பற்றுக் கொண்டுள்ள அவர், தமிழில் மட்டும், இவை பரவினால் போதாது என்று ஆங்கிலத்திலும் பரவவேண்டும் எனும் பரந்த நோக்கில் **'Herbs and Health'** எனும் காலாண்டு ஆங்கில இதழினை வருகின்ற நவம்பர் மாதம் முதல் வெளியிட இருக்கின்றார்.

இவ்வாறு கடந்த 20 ஆண்டுகளாக, தமிழகத்தில் எவ்வித எதிர்ப்பு மின்றி மூலிகைமணியை பாமரரும் படித்துப் பயன்பெறவேண்டும் எனும் நோக்கத்தில் பொருள் நஷ்டம் இருந்த போதிலும், பொருட்படுத்தாது தொடர்ந்து பணி புரிந்து வருகின்றோம்.

இப்பணிகளை விரிவாக்க,

ஆங்கில இதழ் நடத்துதல்.

சித்த மருத்துவ ஆய்வுக்கழகம் நடத்துதல்,

வெளிநாடுகளில் சித்த மருத்துவப் புகழினைப் பரப்புதல்,

போன்ற திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

இப்பணிகளெல்லாம் திட்டமிட்டவாறு தடையின்றி நடைபெற மூலாதாரம் தமிழக மக்களின் பேராதரவுதான்.

இந்த ஆதரவு நீடிக்க நீடிக்க, செழிக்க செழிக்க மூலிகை மணியின் திட்டங்கள் நீடிக்கும், செழிக்கும்.

மூலிகைமணிக்கு நிரந்தரமான நிதிவசதி ஏதுமில்லை. அரசாங்க உதவியும் இதுவரை கிட்டவில்லை. எனவே, சில நேரங்களில் இதழ்களை உரிய நேரத்தில் வெளியிட இயலவில்லை.

இந்நிலையினை மேலும் வளரவிடாமல், உரிய நேரத்தில் பொலிவுடன் மேலும் பல திறமுடன் இதழினை வெளியிடவும், திட்டமிட்டுள்ள ஆங்கில இதழினை அயலவரும் போற்றும் வண்ணம், வகை வகையான மூலிகைகளை வண்ணமுடன் வெளியிட ஏராளமான நிதிவசதி தேவைப் படுகிறது.

எனவே, தமிழகத்திலுள்ள

வள்ளல் பெருமக்கள்

வாசக அன்பர்கள்

தமிழ்ப் பற்றுளர்கள்

சித்த மருத்துவ ஆதரவாளர்கள்

'மூலிகை மணியின்' ஆக்கப் பணிகளுக்கு உறுதுணை அளிக்கும் வண்ணம், 'நன்கொடை' அளித்துதவ வேண்டுகிறோம்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதுபோல் கையில் கிடைக்கும் காசினை மனம்நிறைந்து 'மூலிகைமணி' போற்றும் தமிழக சித்த மருத்துவக் கலை வளர்ச்சிக்கென வாரி வழங்க வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் பட்டியலை அடுத்த இதழிலிருந்து மூலிகைமணியில் தொடர்ந்து வெளியிடுகிறோம்:

ரூ. 101-அளிக்கும் அன்பர்கட்கு ஆசிரியர் **கண்ணப்பர்** எழுதிய **நம்நாட்டு மூலிகைகள்** செட் 7 பாகங்கள் ரூ. 50 விலையுள்ளது அன்பளிப்பாகத் தரப்படும். ரூ. 251-க்குமேல் செலுத்தும்

அன்பர்கட்கு எமது வெளியீடுகள் (ரூ. 200-மதிப்புள்ளவை) அனைத்தும் இலவசமாக அளிக்கப் பெறும்.

''மூலிகைகளுக்குத் தலையிருந்தால் கண்ணப்பரை தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடும்.'' என்று குமுதம் இதழ் பாராட்டிய மூலிகைமணி—

''ஒரு அரசாங்கம் செய்யவேண்டிய பணியை கண்ணப்பர் தனிமனிதனாக இருந்து செய்துவருகின்றார்'' என்று விஞ்ஞான மேதை ஜி. டி. நாயுடு பாராட்டிய,

மூலிகைமணியின் பணிகள் போதிய நிதிவசதியின்றி இடர்பட்டு வருகின்றது. அந்த இடரினைக்களைந்து மேலும் அதன் பணிகள் விரிவாகப் பரவ, அன்பர்கள் நன்கொடையினை வாரி வழங்க வேண்டுகிறோம்.

மூலிகைமணி வளர்ச்சிக்காக—நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய் நன்கொடையும், பசியறிந்து குழந்தைக்குத் தாய் புகட்டும் தாய்ப்பாலுக்குச் சமமாகும்.

மூலிகை மணிக்கு அளிக்கும் நன்கொடை ''முன்னோர் அளித்த மூலிகைச் செல்வம் மறையாது மறுமலர்ச்சி பெற உதவும்'' சித்தமருத்துவ அறிவும் பயனும்—மக்களிடையே ஆணிவேரைப்போல் ஊன்றிட உதவும். தமிழகம் மட்டுமின்றி உலகமக்களும், சித்தமருத்துவம், மூலிகைப் பயன்களை உணர பேருபகாரமாக அமையும். நோயற்ற நல்வாழ்வுப் பணிக்கு உறுதுணையாக அமையும் வகையில் அளப்பரிய பயனை நல்கும் மூலிகைமணியின் 'நல்வாழ்வுப்பணிக்கு' நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு ரூபாயும், உன்னதத் திருப்பணிக்கு உதவிய அருளைத் தரும்! நினைவிருக்கட்டும்,

''மூலிகைமணி இதழின் திட்டங்கள் வளர
உங்கள் நன்கொடை உரமாகத் திகழும்.''

நன்கொடைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல்வழியோ அனுப்ப வேண்டுகிறோம்.
வேறு எந்த வழியும் எவர் மூலமும் அனுப்ப வேண்டாம்.

மூலிகை மணி அலுவலகம்
22, திருமலைப்பிள்ளை வீதி எண்-2,
தி. நகர், சென்னை-600 017. தொலைபேசி : 442947

ஞாயிறு வட்டம்

சித்தர்கள், சித்தர்நெறி, சித்தமருத்துவம் ஆகியவற்றில் முதிர்ந்த அறிவும், அனுபவமும் வாய்க்கப்பெற்ற நல்லறிஞர்கள் இன்றும் ஆங்காங்கே அமைதியும், அடக்கமுமாக வாழ்ந்து வருகின்றுர்கள். சென்னையில் ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி, ஜஸ்டிஸ் மகராஜன், நீதிபதி பலராமையா, திரு. செல்வராமன், டாக்டர் மாணிக்கவாசகம், டாக்டர் ந. சஞ்சீவி, ஐ.ஜி. பொன். பரமகுரு போன்ற பெருமக்கள் இத்துறைகளில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவர்கள் மட்டுமல்ல, பல்வேறு அனுபவங்களை வாய்க்கப்பெற்றவர்கள் என்பதும் புலனுகிறது. அவர்களுடன் அவ்வப்போது உரையாடும்போது கிடைக்கின்ற பல்வேறு தகவல்கள் உண்மையானது மட்டுமல்ல ஆராய்ச்சிக்கும் உறுதுணையாகின்றது. அவ்வகையில், ஞாயிறு தோறும் இப்பெருமக்களைச் சந்தித்து உரையாடி அதன்மூலம் கிடைக்கும் தகவல்களை 'ஞாயிறு வட்டம்' எனும் இப்பகுதியில் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் 'மூலிகை மணி' மகிழ்ச்சி அடைகின்றது. தொடர்ந்து இப்பகுதி வெளிவரும். —க.வே.

இயற்கை நெறியான சித்தர்நெறிக்கும், நீதிபதிகட்கும் நெருங்கிய தொடர்பு உண்டு போலும். மாயூரம் நீதிபதி வேதநாயகம்பிள்ளை முதல், இன்று வாழும் உயர்நீதிபதிகளான திரு. பலராமையா,மகராஜன் என்று பட்டியல் நீளுகின்றது.

அண்மையில், ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி அவர்களை, சித்தர் நெறி களஞ்சியமாய்த் திகழும் திரு. செல்வராமன் மூலம் ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று சந்திக்க நேர்ந்தது. ஏறக்குறைய மூன்றுமணி நேரம் அவருடன் உரையாடியபோது கிடைத்த தகவல்கள் அத்தனையும் எங்களைத் திகைக்க வைத்தது.

எத்தனைவகைச் சித்தர்களைச் சந்தித்துள்ளார்.

அரவிந்த அன்னையின் அருட்சக்தியை அணுக்கமாக இருந்து பெற்றுள்ளார்.

சித்த மருத்துவக் குறிப்புகளை 'Finger tip' என்பார்களே, ஹுஹும்! அதுகூட இல்லை, 'Tongue Tip' நாக்கு நுனியில் அல்லவா வைத்துக்கொண்டு உதிர்க்கின்றுர். சித்தமருத்துவம் மட்டுந்தானு! ஓமியோபதி மருந்து பெயர்களையும் குறிப்பிடுகின்றுரே! 'பன்றிமலைச்சுவாமிகளின் பிரதம சிஷ்யர்' என்று

கூறிக்கொள்வது மட்டுமின்றி; அவரை நுட்பமாகத் தான் எவ்வாறு உணர்ந்துவருகின்றேன் என்பதையெல்லாம் விளக்கு கின்ருர்.

அவர் கூறிய செய்திகளை வெளியிட 'மூலிகை மணி'யில் போதிய இடமில்லை. சிலவற்றை மட்டும் கீழே அளித்துள்ளேன்.

* Occult Power என்பார்களே (மாந்திரீக சக்தி) அந்த சக்தியில் தலையாயது 'குணசீலம்' எனும் ஊரில் (திருச்சிக்கு அருகில் உள்ளது) உள்ள பெருமாள் கோயில். பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்ருல் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இக்கோயிலுக்குச் சென்று சில நாட்கள் தங்கிவருவதால் முற்றிலும் தீரும் என்று கூறுகின்ருர். இக்கோயிலில் உள்ள பெருமாள் சன்னதி எவ்வித மாந்திரீகக் கோளாறுகளையும் முறி யடிக்க வல்லமை பெற்றது என்கின்ருர் திரு. சூரிய மூர்த்தி. இச் செய்தியை அறிந்தபின் வீட்டில் ஒருநாள் தொலைக் காட்சியினைப் பார்த் துக்கொண்டிருந்தேன்.-Occult Healing-எனும் பொருளில் தொலைக் காட்சி ஒளிபரப்பிய ஒரு நிகழ்ச்சியில் திரு. சூரியமூர்த்தி அவர்கள் குறிப் பிட்ட 'குணசீலம்' கோயிலைப் படம்பிடித்துக்காட்டினர். மனநிலை பாதிக் கப்பெற்ற பலரை சங்கிலியால் பிணைத்து அவர்களை இக்கோயிலின் சன்னதியில் உட்கார வைத்து, வழிபாடு செய்து பின் அர்ச்சகர் அவர்கள்மீது தீர்த்தம் தெளிக்கும் காட்சியை விளக்கி இவ்வாறு 48 நாட்கள் தங்கி செய்துவர பலரும் குணமடைவதாகக் கூறினுர்கள். ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி கூறிய கருத்தினை, தொலைக் காட்சி உறுதிப்படுத் தியது தெய்வப் பொருத்தமாக அமைந்ததைக் கருதி, வியந்தேன்.

* மறைந்த ஆவி, தான் மிகவும் நேசித்தவர்களின் வீட்டைச்சுற்றியும் தன்மீது அன்பு செலுத்துபவர்களைச் சுற்றியும் எப்போதும் இருக்குமாம். துல்லியமாகக் கூறப்போனுல் ஒவ்வொருவரைச் சுற்றியும் அரை அடி தொலைவில், அவர்கள் அன்பு செலுத்தும், அவர்கள் மீது அன்பு செலுத் திய மறைந்தவர்கள் ஆவி வட்டமிட்டவாறு இருக்குமாம். சாதாரண மாக இருக்கும் போது இந்த ஆவிகள் நம் கண்ணுக்குப் புலனுவதில்லை. ஆனுல் மரணம் நெருங்கும்போது ஒவ்வொருவருக்கும், தன்னை நெருங்கி யுள்ள ஆவிகள் புலனுகும். அண்மையில் வெளிவந்த 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'யில் இந்தச் செய்தியைப் படிக்கும்போது எனக்கு சில காட்சிகள் புலனுயிற்று.

நம் குடும்பங்களில் மரணந் தருவாயில் உள்ளவர்களை நெருங்கிக் கூர்ந்து நோக்கினுல் அவர்களில் சிலர், மேலே விட்டத்தை நோக்கி, 'அதோ செத்துப்போன என் அம்மா கூப்பிடுருங்க! கை நீட்டி அழைக் கிருங்க'—என்று கூறுவதைக் காணலாம். அவர்கள் நோக்கிய இடத்

தில் நாம் பார்த்தால் ஒன்றும் தெரியாது. ஆனால் செத்துக்கொண்டிருக்கும் நபரின் கண்களுக்கு மட்டும் புலனாகி அவர் மேலும் மேலும் விழித்து ஆவேசமாகக் கூறுவார். நாம் 'பிதற்றல்' என்று அவரை பிடித்து படுக்கையில் படுக்க வைப்போம். 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி, கூறும் செய்திக்கு, இத்தகு காட்சிகள் பொருத்தமாக இருந்தபோதிலும்,

ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி கூறிய அவர் அனுபவம் பொருத்தமாக உள்ளது.

அவருடைய உறவினர் ஒருவர் சில ஆண்டுகட்கு முன்னர் மறைந்து விட்டார். மறைந்த அப்பெண்மணி, இவருக்கு தங்கை முறையாம். இவரை அண்ணா என்று அழைப்பாராம். சொந்த அண்ணன் இருவர். அவர்களைப் பெயருடன் சேர்த்து அண்ணா என்று அழைப்பாராம். ஆனால் திரு. சூரியமூர்த்தி அவர்களை மட்டும் அண்ணா என்று பெயர் குறிப்பிடாமல் அழைப்பாராம். எனவே அவர்கள் வீட்டில் அண்ணா என்று குறிப்பிட்டால் அது திரு. சூரியமூர்த்தி அவர்களை மட்டுமே குறிக்குமாம்.

அந்த அம்மையார் மறைந்து சில ஆண்டுகட்குப் பின், அவர்கள் வீட்டிற்குச் சென்றார் திரு. சூரியமூர்த்தி. அன்று ஒரு கூட்டத்திற்குச் சென்று பேசிவிட்டு, ரோஜா மாலையுடன் திரும்பிவந்து, தான் தங்கியுள்ள அப்பெண்மணியின் வீட்டு மாடிக்குச் சென்றார். அங்கு மறைந்த அப்பெண்மணி-தன்னை அண்ணா என்றழைக்கும் அந்தப் பாசமுள்ள தங்கையின் புகைப்படம் மாட்டியிருந்ததைக் கண்டார். கூட்டத்தில் அளிக்கப்பட்ட ரோஜா மாலையை தங்கையின் படத்திற்கு மாட்டிவிட்டு கீழே வந்தார்.

கீழே அப்பெண்மணியின் மூன்று மகள்கள் ஏதோ ஒரு மந்திரச் சடங்கினை செய்துகொண்டிருந்தார்கள்.

திரு. சூரியமூர்த்தி அவர்கள் ஒருபுறம் வாக்கிங் செய்துகொண்டிருந்தார். திடீரென்று மூன்று மகள்களும் திரு. சூரியமூர்த்தி அவர்களிடம் வந்து 'அங்கிள்! இங்கே வந்து பாருங்களேன்' என்று பரபரப்புடன் வந்து அழைத்தார்களாம்.

அவரும் அங்கு சென்றபோது Medium மூலம் எழுதுவது போல் மறைந்த தங்கையின் கீழ்க்கண்ட வாசகம் மந்திர பீடத்தில் எழுதப் பட்டு இருந்ததாம். 'Thank you Anna for Rose Garland' என்று எழுதப்பட்டிருந்ததாம். அதுமட்டுமின்றி, அவர்கள் குடும்பத்தில் அண்மைக் காலத்தில் நடந்துவரும் சம்பவங்களையெல்லாம் எழுதி, அவற்றையெல்லாம் துல்லியமாக எடுத்துச்சொல்லியதாம். அந்த மூன்று

மகள்களுக்கும், முதலில் எழுதப்பட்ட Thank you Anna for Rose Garland என்ற விஷயம் புரியவில்லையாம். அதுபற்றி அவர்கள் அவரைக் கேட்டபோது,

'மாடிக்கு வாருங்கள்' என்று அவர்களை அழைத்துச்சென்று அங்கு மாட்டியிருந்த அவர்களின் அம்மா படத்தைக் காட்டினாராம்.

'இப்போதுதான் இந்த ரோஜா மாலையை உங்கள் அம்மா படத்திற்கு மாட்டிவிட்டு வந்தேன். அதைத்தான் அப்படி எழுதியிருக்காங்க' என்று, அவர்களுக்கு விளக்கினாராம்.

இதனைக் கேட்ட அம்மூன்று மகள்கள் மட்டுமல்ல; நாங்களும் திகைத்துப்போனோம். 'இல்லஸ்ட்ரேட்டர்டு வீக்லி' கட்டுரையும், அண்மையில் நான் படித்த At the hour of Death என்ற நூலின் கருத்துக்களும் Flash back போல் நினைவில் ஓடின. அனைத்தையும் எழுத முடியுமா?

அண்மையில் நான் படித்துவரும் இத்தகு ஆவிஉலகச் செய்திகளுக்கு அரணாகப் பல உண்மை நிகழ்ச்சிகள் பொருந்தி வருவதை உணர்கின்றேன். அதில் முக்கியமானது ஜஸ்டிஸ் சூரியமூர்த்தி அவர்களின் அனுபவம்.

அடுத்து, திரு. செல்வராமன் அவர்கள் இதே போன்ற ஒரு நிகழ்ச்சியைக் கூறினார். (தொடரும்)

நம் நாட்டு மூலிகைகள்

225-வது மூலிகை!
"ரோஜாப் பூ"

'ரோஜாப் பூ' சீசன் இது! திரைப்படங்களில் ரோஜா அலை வேகமாக வீசி வருகின்றது. சிகப்பு ரோஜாக்கள், ரோஜாப்பூ ரவிக்கைக் காரி என்ற திரைப்பட பேனர்களில் 'ரோஜாப் பூ' படர்ந்து காணப்படு கின்றது. நடிகையின் படத்தைவிட, ரோஜாப்பூவின் படம் உண்மையி லேயே கவர்ச்சியாகக் காட்சி அளிக்கின்றது. கண்ணுக்குக் கவர்ச்சி யாகக் காட்சியளிக்கும் ரோஜாப்பூவை, 'மூலிகைமணி' யின் இம்மாத இதழின் அட்டைப்படத்தில் கண்டுகளித்துவிட்டு, அதன் மருத்துவக் குணத்தைக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

கண்ணுக்குக் கவர்ச்சியாகக் காட்சி அளிக்கும் ரோஜாப்பூ, மருத் துவக் குணத்தில், மிகச் சிறப்பான மூலிகையாக விளங்குகின்றது.

மருத்துவ அகராதியில் ரோஜாப்பூவிற்கு அழகான பெயர் குறிக் கப்பெற்றுள்ளது. பன்னீர் சோடா, பன்னீர் ரசம், பன்னீர் பீடா என்று குறிப்பிடுவதுபோல், பூக்களில், பன்னீர்ப்பூ—என்று பெயர் பெற்ற ஒரே பூ, ரோஜாப்பூ. ஆம்! ரோஜாப்பூவிற்கு மருத்துவ உலகில் பன்னீர்ப்பூ' குலாப்பூ என்ற பெயர்கள் உண்டு. வாசம் மிகுந்த மலராகையால் 'பன்னீர்' என்ற அடைப்பெயர் சேர்ந்திருக்கக் கூடும். சித்தர்கள் சிற்ருமரை—என்றும் குறித்துள்ளனர். என்ருலும், 'ரோஜா' என்று குறிப்பிடுவதில்தான் கவர்ச்சி உள்ளது. ரோஜாவிடம் மனம் பறிகொடுக் காதவர்களே இருக்கமாட்டார்களே! பண்டித நேருவிற்கு—ரோஜாவின் ராஜா—என்ற சிறப்புப்பட்டமே உள்ளது. எல்லோரையும் தன் கவர்ச்சி யாலும், வாசனையாலும், ஈர்க்கும் 'ரோஜாப்பூ'—சித்த மருத்துவர்களை யும் ஈர்த்துள்ளமை வாசனைக்கும், அழகுக்கும் மட்டுமல்ல; மருத் துவ குணத்திலும் இணையற்றது 'ரோஜாப்பூ' என்பதை உலகுக்கு உணர்த்தவே ஆகும்.

ரோஜாவின் மருத்துவக் குணம்

வெள்ளை, இளஞ்சிவப்பு, சிகப்புரோஜா, மஞ்சள், பச்சை என பலவகை நிறப்பூக்களைக் கொண்டுள்ள ரோஜாச் செடியில் நறுமண முடையது இளஞ்சிவப்பும், சிகப்புரோஜாவும்தான். என்ருலும் மருத் துவக் குணத்தில் இளஞ்சிவப்பு ரோஜாவே பெரிதும் பயனுகிறது. வழக்கில் உள்ளது. ரோஜாச்செடியில், அதன் பூ மட்டுமே மருத்துவப் பயனுடையது. இனிப்பும், துவர்ப்பும் கலந்த சுவையுடைய ரோஜாப்பூ, குளிர்ச்சியைத்தரும் பண்புடையது. உடலைத் துவர்ப்பிக்கச்

செய்யும்; உறுப்புகளில் தோன்றும் உஷ்ண வாய்வுக் கோளாறுகளை நீக்கும்.

மலச்சிக்கல், காய்ச்சல், வறட்சி, குமட்டல். ஆசன வாய் எரிச்சல், வயிற்றுளைச்சல், இரத்தப்பிரமேக ஒழுக்கு—ஆகியன, ரோஜாப்பூவின் குணத்தால் ஒழியும் நோய்களாகும்.

ரோஜாப்பூவின் மருத்துவ முறைகள்

ரோஜாப்பூவின் இதழ்களைக் கொண்டு பன்னீர், வெந்நீர் ஊறல், குடிநீர், சர்பத், குல்கந்து, அத்தர் முதலியன செய்து மருந்தாக உபயோகிப்பர்.

பன்னீர்:

இளஞ்சிவப்புடைய மணம் மிகுந்த ரோஜா இதழ்களை 3 லிட்டர் எடுத்து—6 லிட்டர் தூய்மையான நீரில் ஊறவைத்து வாலையிலிட்டுக் காய்ச்சினுல் பன்னீர் இறங்கும். இதனை மேற்பூச்சுக் களிம்புகள் செய்ய உதவும் வாசனைப் பொருளாகப் பயன்படுத்தலாம்.

முகப்பரு, சுகசந்நி, சந்நிபாதம் போன்ற நோய்களுற்றபோது, ரோஜாப்பூப் பன்னீர் 2 அவுன்ஸ் வீதம் 2 வேளை குடித்துவர அவை நீங்கும். மனம் உற்சாகம் பெறும்; சோர்வு நீங்கும். இளைப்பு நீங்கி, வாதபித்த கப நிலைகள் தன்னிலை எய்தும்.

இப்பன்னீரில், பேதி மருந்து கலந்து உட்கொள்ள, பேதிமருந்துகளின் வெகுட்டல் நாற்றம், குமட்டல். வாந்தி ஆகியன வராது.

காய்ச்சல், தாகம், குமட்டல், உற்றபோது, இதில் சிறிது தேன் கலந்து அவ்வப்போது பருகி வரலாம்.

இரத்தப்பிரமேகம், வயிற்றுவலி நீங்க

உலர்ந்த ரோஜாப்பூ இதழ்கள் 1 கிலோ எடுத்து 2 லிட்டர் வெந்நீரில் அரை நாள் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும். அதில் அரை கிலோ சர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். 100 கிராம் பன்னீர் இதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

நாள்பட்ட மலச்சிக்கல், உஷ்ணத்தால் ஏற்படும் கடுப்பு, ஆசன எரிச்சல், இரத்தப்பிரமேகம் எனும் இரத்த மூத்திரம் ஆகியவற்றுக்கு, மேற்குறித்த சர்பத் 100 மில்லி அளவு எடுத்து நீரில் கலந்து காலை மாலை, இரவு மூன்றுவேளை பருகிவர அவை தணியும்.

அத்தர்:

ரோஜாப்பூவிலிருந்து ஒருவித எண்ணெய் எடுப்பார்கள். இதற்கு 'அத்தர்' என்று பெயர். மணம் மிகுந்த இந்த அத்தர் பல காததூரம் நீண்ட நேரம் வீசும். அத்தர் போன்ற வாசனைகளால் சிலவகைத் தொற்று நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றன. காற்றில் பரவும்

நச்சுக்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் ரோஜா அத்தருக்குண்டு. பண்டிதர்கள், அந்தப்புர அரசிகள். அரசர்கள், ஏன் இக்காலத்தில் ராஜ்நாராயணன் போன்ருேர் அத்தர் மீது மோகம் கொண்டதற்கு அதன் மணம் முக்கிய காரணம் என்ருலும், அதனுலேயே பல நோய்கள் வராமல் தடுத்துக்கொள்ளும் வழியையும், அவர்களை அறியாமலேயே புகுத்தியுள்ளனர்.

ரணங்களை ஆற்ற ரோஜாப்பூ 'லோஷன்'

ஆருத நாட்பட்ட அழுகிய புண்கள், நாற்றமெடுக்கும் புண்கள் மீது, ரோஜாப்பூ 'லோஷன்' தடவி வர, நாற்றம் விலகும், புண்ணில் மணம் வீசும். ரணமும் விரைவில் ஆறும்.

செய்முறை :

ரோஜாப்பூ பன்னீர்	300	மில்லி
மீன் கொழுப்பு	50	மில்லி
வாதுமை எண்ணெய்	300	மில்லி
ரோஜாப்பூ எண்ணெய்	20	துளி

இவைகளை நன்கு கலந்து ரணங்கள்மீது தடவிவர அவைஆறும். நறுமணமாயிருக்கும். தலைமுடித் தைலங்களிலும் கலந்து தடவி வரலாம்.

மலச்சிக்கலுக்கு ரோஜாப்பூ குல்கந்து

மலக்குடார மெழுகு போன்ற சித்த மருந்துகளில், ரோஜாப்பூ குல்கந்து முதலிடம் பெறுகிறது. நாட்பட்ட மலச்சிக்கல், தீய்ந்தமலம், மூலச்சூடுடையவர்கள் ரோஜாப்பூ குல்கந்து தினம் 2 டீஸ்பூன் சாப்பிட்டுவர, மலச்சிக்கல் விலகும். ஆசனவாய் எரிச்சல் நிற்கும்.

கவர்ச்சி உள்ள இடத்தில்: அபாயம் உண்டு. கவர்ச்சியான ரோஜாப்பூவிலும் அபாயம் உண்டு. ஆம்! கூர்மையான முள் அபாயமான முள்உண்டு; அத்துடன் அளவற்ற மருத்துவப்பயனும் உண்டு. எனவே, அடுத்தமுறை வீதியோரத்து திரைப்பட பேனரில், ரோஜாப்பூவைப் பார்த்தால்,

1 மலச்சிக்கலைப் போக்கும்
2 குளிர்ச்சியைத் தரும்.
3 இரத்த மூத்திரம் ஒழியும்.
4 ரணம் ஆறும்.
5 நச்சுக்கிருமிகள் விலகும்.
6 தொற்றுநோய் வராது.
7 காய்ச்சல், குமட்டல் வராது.

போன்ற மருத்துவக் குணங்கள், உங்கள் கண்முன் திரைப்பட ரீல் ஓடுவதுபோல் ஓடுமல்லவா?

சிற்ற மரைப்பூவால் சேர்ந்தமலக் கட்டுவிடும்
உற்றவெப்பு தாகம்அதி ஒக்காளஞ்—சற்றும்விடா
மூல எரிஅரத்த மூத்திரம் வயிற்றிசிவும்
ஞாலம்விடுத் தேகும் நவில். —(கும்பமுனி)

நோயும் மருந்தும்

வாசகர்கள் கேள்வியும் ஆசிரியர் பதிலும்

கேள்வி: எனக்கு கொஞ்ச நாட்களாக சிறுநீர் சரிவர இறங்கவில்லை, ஆகாரம் சரிவர சாப்பிட இயலவில்லை. உடம்பில் சூடு அதிகமாக இருக்கிறது ஏழைக்கேற்ற எளிய வைத்தியம் கூறுங்களேன்!

பதில்: ஏழைக்கேற்ற எளிய வைத்தியம் மூலிகை வைத்தியம் தான் என்பதை உணர்ந்த நண்பரே! கவலை வேண்டாம். வெள்ளரி விதை 100 கிராம் வாங்கி, காலை, பகல், இரவு மூன்றுவேளை வேளை ஒன்றுக்கு 2 கிராம் வீதம் வாயிலிட்டு மென்று பால் அல்லது வெந்நீர் சிறிது பருகி வாருங்கள். 10 நாட்களில் நோய் தணியும். முள்ளங்கி, வாழைத்தண்டு, காரட், பூசனி போன்ற காய்கறிகளை உணவில் அடிக்கடிசேர்த்து வாருங்கள்: 1 நாளைக்கு 8 டம்ளர் தண்ணீர் குடியுங்கள். சிறுநீர் தாராளமாகக் கழியும்.

கே: என் அண்ணன் குடிப்பதற்கு எப்போதும் வெந்நீர் தான் கேட்கின்றார். இது நல்ல பழக்கமா?

ப: சத்தியமாக நல்ல பழக்கம்தான் தங்கச்சி! வெந்நீர் பருகுவதால் மட்டும், 40 விதமான நோய்களை வராமல் தடுக்கலாம் என்று மேனாட்டறிஞர்கள் கூறியுள்ளார்கள்; அவர்கட்கும் முன்னதாக, நம் நாட்டுச் சித்தர்கள், 'நீர் கருக்கி, மோர் பெருக்கி' என்ற பாட்டில், நீரை கொதிக்க வைத்து அருந்துவ்தால் நோய் வராமல் வாழலாம் என்று கூறியுள்ளனர். எனவே! 'அண்ணாவின் வெந்நீர் பழக்கம்' நல்ல பழக்கம்தான் தங்காய்! கவலை வேண்டாம்.

கே: ஆங்கிலத்தில் பத்திரிக்கை எப்போது வெளியீடு செய்வீர்கள் சந்தா எவ்வளவு?

ப: சித்த மருத்துவம், மூலிகைகள் புகழ் ஆகிய இரண்டின் வளர்ச்சியை உலக அரங்கில் எடுத்துக்காட்ட 'Herbs and Health' எனும் காலாண்டு ஆங்கில இதழ், நவம்பர் மாதம் முதல் வெளியிட ஏற்பாடாகியுள்ளது. சந்தா பற்றிய அறிவிப்புகள் அடுத்த இதழில் காணலாம்.

கே: உடம்பில் சூடு அதிகமாக ஆகியோ, என்னமோ! தினமும் சுமார் பத்து, பதினைந்து தடவை சிறுநீர் வெளியேறுகிறது. தினமும் சூடு பிடித்துக் கொள்கிறது. மஞ்சள் நிறமாகவே சிறுநீர்வெளியேறுகிறது, எனக்கு 28 வயது ஆகிறது.

ப: வெட்டைச்சூடு காரணமாக, சிறுநீர் கழிவதில் குற்றம்

ஏற்பட்டுள்ளது. ஒரு நாள் விட்டு ஒருநாள் இளநீர் 1 சாப்பிடவும். மணத்தக்காளி, பசலை, முள்ளங்கி, காரட் போன்றவற்றையும் கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி ஆகியவற்றை உணவில் அடிக்கடி சேர்த்து வரவும். பகலில் மோர் 2 குவளை பருகி வரவும், 10 நாட்களில் சரியாகும்.

கே: நான் தினசரி மாலை 6மணியளவில் கரும்புசாறு ஒரு கண்ணுடி டம்ளர் அளவும், பப்பாளிப் பழத்துண்டுகள் சில துண்டுகள் சாப்பிட்டு பால் 200 மில்லி குடித்துவிடுகின்றேன்.

திருமணமானதால் தினசரி இப்படி சாப்பிடலாமா? ஏதும் தவறில்லையா என்பதை தயவு செய்து தெரியப் படுத்த வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ப: கரும்புச்சாறு வாரம் 1 அல்லது 2 முறை பகலில் சாப்பிடவும். மாலையில் சாப்பிடுவதால் தினமும் சளிசேரும், கபம் மிகும். பப்பாளிப்பழம் வாரம் மூன்று நாட்கள் 2 துண்டு சாப்பிடுவது நல்லது. அதனுல் திருமணஉறவுகள் பாதிக்காது. கவலை வேண்டாம். வயிற்றுக் கடுப்பு, வலி இருக்கும்போது பப்பாளி சாப்பிடவேண்டாம்.

கே: எனக்கு ஓரிரு-பெண்டிருடன் தொடர்பு ஏற்பட்டு மூன்று நான்கு மாதங்கள் ஆகும், சிறுநீர் வரும்பொழுது மட்டும் சில நேரங்களில் வெள்ளை வருகிறது. சாதாரணமாக இருக்கும்பொழுது வருவதில்லை. சிறுநீரிலும் முதலில் வரும் 4, 5 சொட்டுகளில்தான் ‘வழு வழு’ப்பான நார் போன்ற நீர் வரும்—அடுத்து வரும் சிறுநீரில் அவை இல்லை. சிறு நீர் வெண்மையாகவே இருக்கிறது. கலர் இல்லை. முதுகுத்தண்டுவலி, கைகால் அசதி, இடுப்பு கடுப்பு உள்ளது. மேற்கண்ட குறை அறவே நீங்குவதற்கு ஏற்ற எளியமூலிகை மருந்துகளைக்கூறி, மருந்து சாப்பிடும் முறை, எத்தனை நாட்கள், பத்தியம் இவைகளைக் குறிப்பிட்டு எழுதுங்கள்.

ப: தாங்கள் குறிப்பிட்ட குறைகள் அனைத்தும் விலக, எமது தயாரிப்பான ‘மூலிகை காய கல்பம்’ இரண்டுமுறை சாப்பிட தீரும்.

கே: பச்சைஇலை மூலிகைகளைச் சாப்பிட்டால் பற்கள் விழுந்து விடும் என்கிருர்கள். நீங்கள் பச்சை இலைகளை உண்ணலாம் என்கிறீர்கள். இதற்கு விளக்கம் எழுதவும்.

ப: நான் கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு பச்சிலைகளை அன்றுடம் உண்டு வருகிறேன். பற்கள் விழவில்லை. மாருக, மிக உறுதியாகவும், ‘பளிச்’ சென்றும் இருக்கிறது. இப்போதாவது நம்பிக்கை வருகிறதா?

கேள்வி:

நில்லப்பா பூரணமாய் நின்றுகொண்டு
நிசமாக இன்னமொரு கருவைச் சொல்வேன்
செல்லப்பா சாதிக்காய் சாதிபத்திரி
திருவான வால்மிளகுகிராம் புகூட்டி
மெள்ளப்பா யிளவறுப்பாய்ச் சூரணித்து
விசையான 'ஆனந்த மூலி' வாங்கிக்
கொள்ளப்பா நெய்யாலே வறுத்திடித்து
குணமான சூரணமாய்ச் செய்து கொள்ளே.

மேலே கண்டுள்ள பாடலில் கண்டுள்ள ஆனந்த மூலி என்ற மருந்து, கடைச்சரக்கா அல்லது பச்சிலை மூலிகையா என்ற விபரம் தெரியவில்லை. மற்ற நான்கு மருந்துகளும் கடையில் கிடைக் கின்றன. இவ்வூரிலுள்ள சித்த வைத்தியர்களிடம்இதைப்பற்றிக் கேட்டதற்கு அவர்களுக்குத் தெரியவில்லை என்று சொல்கின்ற னர். உங்களுக்குத் தெரிந்திருக் குமே! 'ஆனந்த மூலி' என்பது என்ன?

ப: ஆனந்த மூலி! என்பது 'கஞ்சா' வின் குழூஉப்பெயர். பரிபாஷையில் கஞ்சாவின்பெயர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது கஞ்சா சாப்பிட்டால், ஆனந்த மயமாக இருக்கலாம். கஞ்சாவின் இக்குணத்தை குறிக்கும் காரணப் பெயரே—ஆனந்த மூலி. புரி கிறதா நண்பரே! இப்போது பாட்டில் குறிப்பிட்ட மருந்தினை செய்துவிடுவீர்கள் அல்லவா!

கே: எனக்கு வயது 16 நான் உயரமாகவே வளர்ந்துகொண்டு வருகிறேன். உயரம் 1.75 மீட் டர். ஒல்லியாகவும் இருக்கிறேன். உடல் பெருக என்ன செய்ய லாம், அருகம்புல் சாப்பிட்டால் உடல் வளருமா பதில் தருக.

ப: உடல் வளர, பெருக, நல்லுணவு தேவை; நல் உழைப் புத் தேவை. நல் பயிற்சிதேவை. 16 வயதினிலே ..... படம் பார்த் தால், இருக்கின்ற உடம்பும் போய்விடும். எனவே,சத்துணவு, தளரா உழைப்பு, திடமானஉடற் பயிற்சி செய்துவர உடம்பு வள ரும்; பெருகும். எமது தயாரிப் பான 'அமுக்கிஞங் கிழங்கு' பொடி வாங்கி சாப்பிட்டு வர, உடல் உரம், வளம்பெற உறு துணை செய்யும்.

கே: எனக்கு17வயது ஆகின் றது. நான் இயற்கை அன்னை அளித்த அருட்பெருஞ் செல்வ மான தாதுவை நித்திரையில் வரும் கெட்ட கனவுகள் மூலம் அனுதினமும் இழந்து எனக்கு நானே சாவுக்குழியைத் தோண் டிக்கொண்டு இருக்கிறேன் ஐயா, தயவு கூர்ந்து தாங்கள் என்நிலை அறிந்து எனக்கு வாழ்வு அளிப் பீர்கள் என்று நம்புகின்றேன்.

ப: இந்த வயதில் இந்தக் கோளாறு இந்தக் காலத்தில் இருப்பது விந்தை அல்ல தம்பி! விந்தை அடக்க—மனதை, நல்ல சிந்தனைகளில் செலுத்தவும். கீரைகள்,பழங்கள் ஆகியவற்றை நிறைய உண்ணவும். தேன், எலு மிச்சை ஆகியவற்றை அன்றாடம் பருகவும். தனிமையில் உறங்க வேண்டாம். படுக்கும் போது வலதுபுறம் திரும்பிப் படுக்கவும். படுப்பதற்குமுன் பாலுறவு சிந்த னையைத் தவிர்த்து: இறையுணர் வில் செலுத்தினல் விந்து வெளி யேற்றம் படிப்படியே கட்டுபடும்.

சிறுநீர் மருத்துவ வரலாறு

[டாக்டர் இரா. மாணிக்கவாசகம்]

தமிழகத்தில் சிறுநீரை வாதத்திற்கும் வைத்தியத்திற்கும் பயன் படுத்தியுள்ளனர் என்பதை அகத்தியர், திருமூலர், கம்பளிச்சட்டை கைலாசநாதர், புலிப்பாணி, போகர், உரோமரிஷி, மச்சமுனி, யாகோபு என்னும் இராமதேவர், தேரையர், திருவள்ளுவர், கருவூரார், கொங் கணர், புலத்தியர், சுப்பிரமணியர், தக்ஷிணமூர்த்தி முதலான சித்தர் களின் பாடல்களால் அறியலாம் என்பதையும், திருவள்ளுவரின் ஞான வெட்டியான் 1500 என்னும் நூல் வடமொழியில் உள்ள உருத்திரயாமள தமர்தந்திர சாத்திரநூலை ஒத்த கருத்துடையதாக விளங்குகிறது என்பதையும் அறியலாம்.

தமிழ்நாட்டில் நாடோடிகளாகத்திரியும் 'நரிக்குறவர்' போன்ற சில இனத்தவர் இன்றைக்கும் வெளிப்பூச்சு மருந்தாகச் சிறுநீரைப் பயன் படுத்திவருகின்றனர் என்பதை அவர்கள் வாழ்க்கையை ஆராய்பவர்கள் அறிவார்கள்.

தமிழகத்தின் (நீலகிரி, கொல்லி போன்ற) மலைப்பகுதிகளில் வசிக் கும் ஆதிவாசிகளின் இடையேயும் வெளிப்பூச்சாக மட்டுமல்லாமல் உள்ளுக்குப்பருகும் மருந்தாகவும் இருந்துவருகிறது. இவ்வுண்மையை ஆதிவாசிகளோடு பழகுவதையே பொழுதுபோக்காகக் கொண்டு அனுப வங்கள் பலபெற்ற இனிய நண்பர். திரு. பிலோ இருதயநாத் அவர்கள் கூறினார்கள். ஆதிவாசிகள் மூங்கில் குழாய்களில் மெல்லிய துணியைப் போட்டு, தம் சிறுநீரை வடிகட்டிப் பயன்படுத்துகின்றார்கள் என்றும் கூறினார்கள்.

திபெத் நாட்டில் லாமாக்கள் இன்றைய தினமும் இம்முறையைப் பயன்படுத்திவருவதைக் கண்கூடாகக் காணலாம். அதனால்தான் அவர்கள் பெரும்பாலும் நீண்ட ஆயுளுடன் வாழ்கின்றனர் என எண்ண வேண்டியுள்ளது.

காலம் சென்ற சர்.மாரீஸ்வில்சன் (Sir Mourice Wilson)என்பவர் இமயத்தின் உயரமான பகுதியான எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தைச் செயலாக்க முனைந்தபோது லாமாக்களிடமிருந்து இந்த மருத்துவமுறையைத் தெரிந்துகொண்டு பின்பற்றிய காரணத்தால் உடல் வலிமைபெற்றதோடு மட்டுமல்லாமல் நோயினின்றும் தம்மைப் பாதுகாத்துக்கொண்டார் என்றும் அறிகிறோம்.

இமயமலையின் பனிப்பகுதிகளில் இருந்து தவமுயற்சியில் ஈடுபட்டுள்ள 'பைராகிகள்' என்பவர்கள் பலவகையான இலைகளின் சாம்பரில் தமது சிறுநீரையும் குழைத்து உடல்முழுவதும் பூசிக்கொண்டு வேற்றுடையின்றி வெற்றுடம்புடன் வெங்குளிரிலும் வாடாது வாழ்ந்து வருகின்றனர் என்பதை அவர்களுடன் ஆறுமாதங்களுக்கு மேலாக இருந்து பழகிய எனது குருநாதர் வாயிலாக அறிந்தேன்.

பாலைவனங்களின் வழியே பயணம் செல்வோரும், கடலில் சிறு கலங்களினுல் பயணம் செல்வோரும் தம்மிடம் இருக்கும் உண்பன, பருகுவன தீர்ந்துபோனுல் உரியஇடம் சேரும்வரையில் சிறுநீரையே பயன்படுத்துவர் என அறிகிறோம்.

சமணசமய மறைநூல்களும் சன்யாசிகள் அமுரியைப் பருகுவதுண்டு எனக்கூறுகின்றது. 'ஆச்சார்ய பத்திர பாஹு' என்பார் எழுதிய 'வியவஹார் சூத்திரம்' என்னும் நூலின் 49-ம் அத்தியாயத்தில் (Chapter 49 of Vyawahar Sutra by Acharya Bhadrabaru) இக்கருத்து காணப்படுகிறது. சமணர்கள் இரண்டுவகையான நோன்புறுதிகளை (Pratimas) எடுத்துக்கொள்வதுண்டு. முதலாவது இளவேனில் காலத்தின் இறுதியில் அல்லது முன்பனிக்காலத்தில் மேற்கொள்வது. இக்காலத்தில் ஊருக்குப்புறம்பே உள்ள காடுகளிலோ, மலைகளிலோ, பள்ளத்தாக்குகளிலோ, குகைகளிலோ, தனித்திருத்தல் வேண்டும். இவர்களின் விரதகாலங்களில் தினமும் பகல் நேரங்களில் வெளிப்படும் சிறுநீர் முழுமையும் பருகுவர்.

16-ஆம் நூற்றுண்டில் காசியைச்சேர்ந்த பண்டிதர் பவமிஸ்ரா என்பவர் பவபிரகாஷா என்ற நூலில் (Pandit Bhavamishra of Kasi in 16th Century in his Bhavaprakasha) மனிதரின் சிறுநீர் உடலின் நச்சுக்கிருமிகளைப் போக்குகிறது (Toxicity); இதைத் தொடர்ந்து பருகுவதால் நீடித்த நல்வாழ்வுக்கு வழிசெய்கிறது. தோல், இரத்தம் சம்பந்தமான எந்த வியாதியையும் இது குணப்படுத்துகின்றது என எழுதியுள்ளார்.

அஷ்டசங்கிரகா (Ashtang Sangrah) என்ற நூலின் சிறுநீர் அமிலமும் உப்பும் (Alkalies and Salts) காணப்படுவதால் படை நமைச்சல் முதலியன போக்கும் குணம் உடையது. நச்சு முறிவும் ஆகும் என்னும் கருத்து காணப்படுகிறது.

யோகரத்னுகரம் (Yoga Ratinakar) என்னும் நூலில் காணப்படும் சேதியாவது 'காலமைன்' (Calamine) சிறுநீரில் 21 நாட்கள் ஊறவைத்தல் வேண்டும். பின்னர் சூரிய வெப்பத்தில் உலர்த்த வேண்டும். பின்னர் மிளகுடன் கலக்கவேண்டும். இம்முறையில் தயாரிக்கும் மருந்

துக்கு லகு வசந்த மல்டிகுந் (Laghu vasant malticould) என்று பெயர்.

வடஇந்தியாவில் சூரத் பகுதியில் உள்ள யகந்தர் காரியாலயத்தில் வெளியான அகுட் ஜுவன் தொரை (Akhut Jwandorai means inexhaustive life thread published by yagantar karyalaya, Surat in 1923 by shri chandulal Lallubhai Govardhndas) என்னும் நூலுள் இம்முறை மருத்துவம் பற்றி விரிவாகக் காணப்படுகின்றது.

சாரக் சம்ஹிதா என்னும் நூலுள் மூலிகைகளையும் சிறுநீரையும் பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்தும் முறை காணப்படுகிறது (Charak Samhita of Sage Atreya).

ருத்ரயாமதந்திரம், ராசதத்திரம் (Rudra yamal Tantra and Rasa Tandra) ஆகிய நூல்களிலும் இம்மருத்துவமுறை பற்றிய குறிப்பு கரணப்படுகிறது.

வங்காளத்தில் உள்ள வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களில் ஒரு பிரிவினரிடையே ஒரு மரபு உண்டு. திருமணம் நடக்கிறபோது மணமக்கள் மதகுருவின் முன்னிலையில் அவர்கள் தம் சிறுநீரைத் தின மும் பருகுவதாக உறுதி எடுத்துக்கொள்வார்கள். அவர்களின் உடல் நலம் குன்றினுல் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதியில் இருந்து வழுவினுர்கள் என்று கருதப்படுகின்றனர்.

டாக்டர் மனுபாய் படேல் (Dr. Manubhai patel) என்பவர் ஆப்பிரிக்காவில் இருக்கும்போது அங்கிருந்த பிராட்ஸ்டெண்ட் மதத் தைச் சேர்ந்த பாதிரிமார்கள் சிறுநீரை மருந்தாகப் பயன்படுத்துவது அறிந்து பின்பற்றத் தொடங்கினுராம்.

டாக்டர் P.D. தேசாய் என்பவர் 1955-ம் ஆண்டு 'வாட்டர் ஆப் லைப்' (Water of life) என்னும் ஆங்கில நூலைப் படித்தபின் இம்மருத்து வத்தை அடிப்படையாகக் கொண்ட மருத்துவமனையையே தொடங் கினுர்.

திரு. ராவோஜிபாய் (Raojibhai) டாக்டர் பிரஜிபாய் (Dr. Pargjibhai) டாக்டர் சலாரியா (Dr. Salaria) திரு. ஹன்ஸுராஜ் (Sri Aansaraj) முதலானேர் நூல் எழுதியும் மருத்துவமனை தொடங்கி யும் இம்மருத்துவத்துறைக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

எனவே இந்தியாவைப் பொருத்தவரையில் இம்மருத்துவத்துறை மிகப்பழையதே என்பது உறுதி. மிகச் சிலராலேயே பின்பற்றப்பட்டு வந்த இம்முறை 1960க்குப்பிறகு புத்துயிர் பெற்றது என்லாம். ராஜஸ் தான், கர்னுடகம், மகாராஷ்டிரம் முதலிய மாநிலங்களில் 1969-ம் ஆண் டில் மிகப் பரவலாகப் பலரால் பின்பற்றத் தொடங்கப்பெற்றது.

பல்சாட் (Bulsad)மருத்துவரான டாக்டர் D. தேசாய் என்பவர் மருத்துவமனை ஒன்றைத் தொடங்கிச்செய்த தொண்டின் மூலம் குஜராத், பஞ்சாப், காஷ்மீரம் ஆகிய மாநிலங்களிலும் நல்ல விளம்பரம் பெற்றது.

கர்நாடகத்தில் டாக்டர் ஹின்சிம்ராட் (Dr. Hunghimarad) என்ப வர்அவரவர் சிறுநீரையே ஊசியின் மூலம் உள்செலுத்தும் முறையால் ஆஸ்துமாவைக் குணப்படுத்தினர். இதனுல் அந்த மாநிலத்திலும் நல்ல அறிமுகம் ஆனது. இதுபற்றிய கட்டுரை ஒன்று 1970-ம் ஆண்டு மே மாதம் வெளிவந்த மைசூர் மாநில இந்திய மருத்துவக் கழகத்தின் மருத்துவ இதழின் 12-வது பகுதி (12th Volumeயில்) டாக்டர் T. M. சிவானந்தம் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் சித்தர்களாலும், துறவிகளாலும் நெடுநாட்களாகப் பின்பற்றப்பட்டு வந்தாலும், கிராமங்களிலும் ஆங்காங்கு பழக்கத்தில் இருந்தாலும் சுவாமி பூமானந்தா அவர்கள் 1978-ம் ஆண்டு எழுதிய சர்வரோக நிவாரணி என்னும் நூலால் இம்முறை பரவலாக அறிமுகம் ஆனது. அவரது அறிவுரையின்படி நடந்துகொண்டு பலன்கண்டோர் பெரும் பிரசாரகராக இருந்துவருகின்றனர். இன்று பல புகழ்பெற்ற பேராசிரியர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், அரசியல்தலைவர் கள்; அலோபதி மருத்துவர்கள், அரசாங்க உயர்அதிகாரிகள், வணிகர் கள் இப்படிப் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் இம்முறையைப் பின்பற்றி வருகின்றனர், சிலர் பயன்படுத்திவிட்டுவிட்டனர். இவர்களில் பலரை நேரடியாகப் பேட்டிகண்டேன். பெயரைக் குறிப்பிடலாமா எனக்கேட்டதற்கு அவர்கள் தயங்குகிருர்கள். எனவே இம்முறையை பின்பற்றிச் சிறுநீரை மருந்து என ஏற்றுக்கொண்டாலும் வெளிப்படை யாகச் சொல்வதற்குத் துணிவில்லா நிலையில் பலர் உள்ளனர் என்பது வருந்தத்தக்கது. தமிழ் எழுத்தாளர்களில் மிகத்துணிவாக ஆதரவு தந்தவர் மறைந்த புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. தமிழ்வாணன் அவர்கள்தான்.

இன்றைய இந்தியப் பிரதமராக இருக்கும் மேன்மைமிக்க மொரார்ஜி தேசாய் அவர்களால்தான் இம்மருத்துவம் இன்று அகில உலக மருத்துவ

அறிஞர்களின், கவனத்தைக் கவர்ந்துள்ளது. மிகஉயர்ந்த பொறுப்புள்ள பதவியில் இருந்துகொண்டு அவ்வளவு துணிவுடன் இம்மருத்துவ முறைபற்றிக் கூறியுள்ளது, இவரது ஆழ்ந்த நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது. இவரே இம்மருத்துவமுறையைக் கடந்த 30 ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிருர். இவரது சகோதரரின் க்ஷய ரோக நோயை இம்முறையில்தான் இவர் குணப்படுத்தினுராம்.

புகழ்பெற்ற இந்தி நடிகரான திரு. பிரேம்நாத் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தம் சிறுநீரைப் பருகிவருவதோடு புகழ்பெற்ற நடிகர்களான ஜீனத்அமன், தேவ்ஆனந்த் போன்றவர்களுக்கும் பரிந்துரை செய்துள்ளதாகக் குறிக்கின்ருர். இவர் 'சண்டே' என்னும் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் இம்முறையைப் பரிந்துரை செய்தே ஏறக்குறைய70 நோயாளிகளைக் குணப்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஆனல் பிரதமர் அவர்கள் இந்திய க்ஷய ரோக நிவாரணக்கழகத்தின் விழா ஒன்றில் பேசும்போது தமது சகோதரனது நோய் இம்முறையில் தீர்ந்ததாகக் கூறினுலும் கடந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளாகத் தினமும் காலையில் ஆறுமுதல் எட்டு அவுன்ஸ் தனது சிறுநீரைப் பருகுவதாகக் கூறியுள்ளதும் இங்குக் குறிக்கத்தக்கது ஆகும்.

மத்திய அரசின் சுகாதார அமைச்சர் மேன்மைமிக்க ராஜ்நாராயண் அவர்களும், மத்திய அரசின் முன்னுள் துணைசுகாதார அமைச்சராக இருந்தவரும், சென்னை மாநில ஆளுநராக இருந்தவருமான மேன்மைமிகு K. K. ஷா அவர்களும், மத்திய உள்துறை அமைச்சர் மேன்மைமிகு சரண்சிங் அவர்களும், அரியானு முதலமைச்சர் திரு. தேவிலால் அவர்களும், பூதான இயக்கத் தலைவரான திரு. விஞேபா அவர்களும் மற்றும் தேபர், டாக்டர் ஜீவராஜ்மேத்தா முதலானேர் பலரும் வெளிப்படையாக இம்மருத்துவமுறைக்கு ஆதரவு நல்கியவர்கள் என்பது குறிக்கத்தக்கது.

அண்மையில் ஜனதா கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜெத்மலானி (பம்பாயில் பழைய சட்டஅமைச்சரை வென்றவர்) மருந்துத் தயாரிப்பாளர்கள் சிறுநீரில் சில மருந்துகளைக் கலந்து அதிக மருத்துவ அனுபவமுள்ள சிறுநீரைச் சிறிய பாட்டில்களில் விற்பனைக்கு அனுப்பலாம் என்று துணிந்து சிபாரிசு செய்துள்ளது செய்தித்தாளில் வந்ததை அறிவோம்.

இந்தியாவில்தான் சிறுநீரின் மகத்துவம் அறிந்திருந்தார்கள் என்று சொல்லிக் கொள்ள முடியாது. காரணம் ஏறக்குறைய பலநாடுகளிலும்

பல்வேறு காலங்களில் இம்மருத்துவமுறை பயின்றுள்ளது என்பது வியப்புக்குரியது.

அண்மையில் தமிழ்நாட்டில் இம்மருத்துவம் பற்றி ஆராய்ந்து ஓரளவு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கட்டுரை எழுதியவர் டாக்டர் R. V. ராஜன் அவர்கள். அவர்களின் கட்டுரை வாயிலாக அறிய லாகும் செய்தியாவது:—பழைய எகிப்து மன்னர் ஒருவர் சிறுநீர்கழிக்கச் சிரமப்பட்டபோது அவருக்குக் குறிப்பிட்ட மருந்தின் ஒருபாகமாக அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான மனைவியின் சிறுநீரும் இடம் பெற்றதாகும்.

திரு. ராபர்ட் பைல் (Sri Robert Boyle) என்னும் 17-ம் நூற்றாண் டின் ரசவாதி(Chemist) மனிதனின் சிறுநீரைப் பற்றிய முழுஉண்மை யும் விளக்கப்பட வேண்டும் என்றால் ஒரு பெரும் புத்தகமே எழுதலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெறும் வயிற்றில் இரண்டு அல்லது மூன்று டம்ளர் சிறுநீர் அருந்த, வாயு, மூட்டுவலி, நரம்புவலி, முதலியனவும் சிறுநீர் கழிக்க இயலாமையும் நீங்கும் என மருந்து பற்றிய அகராதி (The Dictionary of Drugs) என்னும் 18-ஆம் நூற்றாண்டில் வெளியான பிரஞ்சு அகராதி கூறுகிறது.

பழங்கால கிரேக்க நாட்டில் சிறுவரது சிறுநீர் பாம்புக்கடிக்கு மருந்தாகக் கொள்ளப்பெற்றது.

ஒரு பெண்ணின் மகப்பேற்றை நிறைவிக்க அலியின் சிறுநீர் சிறந்த மருந்தாகக் கருதப்பெற்றது.

பிரான்ஸ் நகரில் 17, 18-ஆம் நூற்றாண்டில் உயர்குலப்பெண்கள் தம் அழகை அதிகரிக்கச் சிறுநீரில் குளித்தனராம்.

1938-ம் ஆண்டு சதைத் திசுக்களின் உடனடி சத்துணர்ச்சிக்கு டாக்டர் எர்னஸ்ட் பிட்டர்மென் (Dr.Ernest Futurman) என்னும் ஜெர்மானியர் சிறுநீரிலிருந்து டிரிபோடைன் (TREBIOTINE) என்னும் பொருளைக் கண்டுபிடித்தார்.

டாக்டர் ரோ (Dr. Else. K.La. Roe) என்னும் புகழ்பெற்ற பிளாஸ்டிக் சர்ஜன், மலையேறும் குழுவுக்கு முன்கண்ட டிரிபோடைன்

மாத்திரைகளைக் கொடுத்ததின் விளைவாகக் களைப்பு, வலி முதலியன அறியாது 18000 அடிவரையில் ஏறமுடிந்ததாம்.

பன்னிரண்டாம் நூற்றுண்டினின்று சிறுநீர் அருந்தும் மருத்துவம் கிடைத்த ஆதாரங்களினின்று நோக்குகையில் பாரசீகத்திலிருந்து மத்தியகிழக்கு ஆசியா, ஐரோப்பா, வடக்கு ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குப் பரவியது என்று கூறலாம்.

ஒருவர் சிறுநீரின் மகத்துவம் பற்றிக் கவிதை எழுதி உலகறியச் செய்துள்ளார். (Dr. Gillies De Corbeil—'Liber De—Urinis')

பழையகாலத்தில் ரோமில் சிறுநீரைக் கம்பளிகளையும், துணிகளையும் சுத்தப்படுத்தவும் மிருதுவாக்கவும் பயன்படுத்தினர். அந்நாளைய ரோமில் பல இடங்களில் சிறுநீரைத் தேக்கிவைத்ததால் மன்னன் வரியிட்டுத் தம் கஜானுவை நிரப்பினுர்.

பாயல் (Boyle) என்பார் லண்டனைச் சேர்ந்த ஹௌபிரிட்ஜ் (Howbritz) என்பவருக்குச் சிறுநீரினின்று பாஸ்பரஸ் தயாரிக்கும் முறையை விளக்கினுர். அவர் அதனைத் தயாரித்து ஐரோப்பாவின் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் விற்று பெரும் பொருள் ஈட்டினுர்.

1838-ஆம் ஆண்டில் பான் சர்டெட், பள்ளிகோட் (Bon-Chardat and Palligot) ஆகியோர் சிறுநீரின் சர்க்கரையை குளுகோஸ் எனப் பெயரிட்டனர். வான்ரௌலி (Von Rouelle) என்பவர் முதன்முதல் சிறுநீரில் இருந்து 'யூரியாவை' 1773-ம் ஆண்டு பிரித்தெடுத்தார்.

1695-ம் ஆண்டு வெளிவந்த சாலமன் ஆங்கில மருத்துவம் என்ற நூலிலும் இம்மருத்துவமுறை காணப்படுகின்றது.

சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து ஒரே சமயத்தில் வெளிவந்த கவனத்துக்குரிய ஆயிரம் கருத்துக்கள் (One Thousand notable Things) என்னும் புத்தகத்திலும் இம்முறைபற்றி காணப்படுகின்றது.

அண்மையில் இங்கிலாந்தில் வாழ்ந்து மறைந்த பாக்ஸ்டர் (W.H.Boxtər J.P. of Leaders and Horragoto) என்பவர் இம்முறையைப் பயன்படுத்தியவர் என்பதோடு; இம்மருத்துவமுறைபற்றி அடிக்கடி துண்டு பிரசுரங்கள் வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழமையான சித்தர் நூல்களில் இருந்து நாம் மேற்கோள் காட்டுவதுபோல மேலைநாட்டவர் கிருத்தவவேதமாகிய பைபிளில் இருந்து

இரண்டு வாக்கியங்களை மேற்கோள்காட்டி இம்முறை தொன்மையானது என நிறுவுகின்றனர். இவற்றின் உண்மையை என் தனி நூலில் விளக்க மாகக் காணலாம்.

அண்மைக் காலங்களில் சிறுநீர் பற்றிய ஆராய்ச்சி அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் நடந்துவருகிறது. சராசரி ஆரோக்கிய மானவரின் சிறுநீரில் ஹார்மோன்கள், என்சைம்கள், டைரக்டின், யூரோகைனீஸ் முதலிய பல சக்திவாய்ந்த மூலப்பொருள்கள் உள்ளன. அவற்றால் புற்றுநோய், இருதயநோய் முதலிய கொடிய நோய்களைப் போக்க முடியும் எனக்கண்டுள்ளனர்.

ஜப்பான் டைம்ஸ்வீக்லி என்ற பத்திரிகையின் மூலம் இச்செய்தி மேலும் வலுப்பெறுகிறது. ஜப்பானில் சிறுநீரில் இருந்து எடுக்கப்படும் யூரோகைனீஸ் என்னும் என்சைம் மூளையில் ஏற்படும் ரத்தக்கட்டி களுக்கும், ரத்த ஓட்டம் சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்த மருந் தாகப் பயன்படுகிறது.

ஒரு மில்லிகிராமின் ஒருபகுதி அளவு இந்த மருந்தை ஊசியில் செலுத்த ஆகும் செலவு 4,600 என் (YEN) ஆகும். (சுமார் 9200 ரூபாய்) எனவே இந்த மருந்தைத் தயார் செய்யும் ஜப்பான் மருந்து நிறுவனம் இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டு இம்மருந் தைத் தயார்செய்யும் எண்ணத்துடன் விஞ்ஞான ரீதியில் சுத்திசெய்யப் பட்ட சிறுநீரை ஏற்றுமதி செய்ய ஏற்பாடுசெய்கிறது.

ஜப்பானில் 4 மாதத்திற்குட்பட்ட கர்ப்பணியின் பெண்களின் சிறுநீரைக் கலந்து ஒரு மருந்துக்கம்பெனி புதுவகை மருந்து தயாரிக் கிறது. ஏராளமான கர்ப்பிணிப்பெண்களிடமிருந்து சிறுநீர் சேகரிக்கப் படுகிறது. ஒருநாள் முழுமையும் வெளிப்படும் சிறுநீரின்விலை ரூ.3-50 என்னும் சேதியும் வந்துள்ளது.

அமெரிக்காவில் டிசம்பர் மாதம் 1973-ம் ஆண்டு வெளிவந்த சயன்ஸ் டைஜஸ்ட் இதழின் (Science Digest Dec. 1973 published in U.S.A.) பிக்டர் ஜேம்ஸ் என்பவர் கரோனரி திராம்போஸிஸ் என் னும் இருதயநோய்க்குச் சிறுநீரின் மருத்துவத்தைப் பயன்படுத்தி வெற்றிகண்டது குறித்து எழுதியுள்ள கட்டுரை பயன்தருவதாகும்.

இவ்வாறு சிறுநீர் மருத்துவம், காலந்தோறும், காலத்திற்கேற்ப பின்பற்றப்பட்டு, இன்று அறிவியல் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது என்பது வரலாறு உணர்த்தும் உண்மை ஆகும்.

(டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்கள் எழுதிய 'சித்தர்கள் கண்ட சிறுநீர் மருத்துவம்' என்னும் நூலின் ஒருபகுதியே மேற்கண்ட கட்டுரை. அச்சில் இருக்கும் இந்நூல் மிக விரைவில் வெளிவரயிருக் கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.) ஃ

சென்ற இதழ் தொடர்ச்சி

விஷஜந்துக்களும் மூலிகைகளும்

—மூலிகை மன்னர் ஆ. இரா. கண்ணப்பர் R.M.P.—

தேள் கடியும் குணாதிசயமும்

தேள் கடித்த இடத்தில் நெருப்பு வைத்தது போன்றதோர் உணர்வு, பின்பு எரிச்சல், கடுத்தல், வலித்தல், விறுவிறுத்தல் பின்பு சிவந்து வீக்கங்காணல், வியர்வைபோல் நீர் சொறிதல் போன்றவை உண்டாகும். ஒரு சிலருக்கு கடிவாயில் இரத்தம் கசிந்து குடைச்சல் வலி மேலேறி தாங்கமுடியாதத் தொல்லைப்படுவார்கள். சீதள தேகமுடையர்களுச்கு உடலில் வியர்வை, மயக்கம், வாந்தி, இழுப்புவலி, உடல் சில்லிட்டுப் போதல், மார்படைத்தல் போன்ற பல குறிகள் உண்டாவதுண்டு.

தேள் கடிக்குச் சிகிச்சை முறைகள்

வீசிய தேளினுக்குக்--கோழியெச்சம்
வெற்றிலை யிற்கொடுக்க விடமகலும்
கொல்லன் கோவைக் கிழங்கரைத்துக்--கொடுத்திடக்
கொடிதான கருந்தேளின் விடமேறுமே
நல்லவெள் ளெருக்கம்பால்--சீலையில்
நனைத்து மயிலிறகு தனிற்சுற்றியே
கோழியெச்ச மேற்தடவி--வைத்துலர்த்திக்
கொடிய பன்னிருந்தேளுங் கொட்டிற்றெனில் அவ்
வேளையிற் றீக்கொளுத்திக்--கொட்டுவாயில்
மெல்ல புகைக்கவிட மில்லை கடுப்பும். (சி-ஆ)

வேறு

எருக்கன் வேர், சிறுகச்சை, கொம்மட்டி வேர், பச்சைக் கற்பூரம், எட்டி வித்து இவைகளை எருக்கம்பால் விட்டரைத்து உருண்டை செய்து வைத்துக்கொண்டு, இதை முலைப்பாலிலாவது அல்லது எருக்கன் பாலிலாவது அரைத்து கடிவாயில் தடவி சூடு பறக்கத் தேய்க்க விடக்கடுப்பு, விடமேறல் ஆகியவைகள் ஒழியும்.

எள்ளெண்ணெய்க் காய்ச்சி அதில் மேனியிலை, வெற்றிலை, உப்பு இம்மூன்றையும் கசக்கி அதிலிட்டு கொட்டுவாயில் ஆவி பிடிக்க விடமிறங்கும்.

எட்டிப் பட்டையில் ஒரு துண்டெடுத்து ஒரு கல்லுப்பு சேர்த்துக் கொடுத்து மென்ற இரசத்தை உட்கொள்ளும்படி செய்ய விடம் இறங்கி சுகமுண்டாகும்.

தேத்தான் கொட்டையை பலமுறை எருக்கன் பாலில் ஊற வைத்தும், உலர்த்தியும் பக்குவப்படுத்தினதில் ஒருவித்தை எடுத்து கடிவாயில் வைத்தால் விடத்தை அது இழுத்துக் கொள்ளுமட்டும் கடி தாங்கி இழுத்துக் கொண்ட பிறகு கீழே விழுந்துவிடும்.

ஆகாசக்கருடன் கிழங்கு தூளில் தண்ணீர் விட்டரைத்து கொதிக்க வைத்துக் கடிவாயில் பூசினவுடன் எரிச்சல் முதலியன நீங்கி குளிர்ச்சியுண்டாகும்.

குறிப்பு :—எந்தத் தேள் விடமும் எருக்கிலைச் சாற்றில் அப்பிரக பற்பத்தைக் கொடுக்க நீங்கும்.

நட்டுவக்காலி விடம்
(இதுவே நண்டுவாய்க்காலி எனப்படுவது)

நட்டுவக்காலி மிகப் பெரியதாகவும், நண்டைப் போன்ற கால்களோடுமிருக்கும். இது கருநட்டுவக்காலி, மாரகார்த்தி நட்டுவக்காலி, மோகனுர்த்தி நட்டுவக்காலி, மிருகார்த்தி நட்டுவக்காலி, பெருங்காற் சம்மிதை நட்டுவக்காலி என ஐந்து வகைப்படும்.

இது கொட்டினுல் காந்தலும், விக்கலும் எரிச்சலுடன் கடுகடுப்பும், குமுறலும், குடைச்சலும், நெறி கட்டுதலும், வியர்வையும், வாயில் நுரைத்தள்ளுவதுங்காணும். இதற்கு அடியிற் கூறப்பட்ட சிகிச்சைகளைக் கொள்வது நலமாகும்.

சிகிச்சை முறைகள்

நட்டு வாய்க்காலி கொட்டிக்--கடுத்திடில்
நன்ரு வழுதுணங்கா யொன்று வெதுப்பிக்
கட்டிட விடத்தணியும்--எட்டிவிதை
கழற்சிக்காய் பிரமாண மிழைத்துப் பூசக்
கடுப்புடனெரிப் பொடுங்கும்--பழம்புளி
காடிதனிற் கரைத்துச் சாடியிற் பெய்தே
அடுப்பினிற் கொதிக்க வைத்துக்--கொட்டுவாயில்
ஆவிபிடிக்க விடம் போய்விடுமே
ஆகாசத்தூளை யெருமைச்--சாணிப்பால் விட்
டரைத்துக் கொதிக்க விட்டவ் வாயில்
நீ காசினளவெடுத்துப்--பூசிவிடில்
நின்றிடுங் கடுப்பெரிப் பகன்றிடுமே. (சி-ஆ)

வேறு

1. அவுரிவேர், காஞ்சிரைவேர் ஆகிய இரண்டையும் சமமாகப் பொடித்து வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொடுக்க தீரும்.

2. வேலிப்பருத்தி, ஆடுதீண்டாப்பாளை இவை இரண்டையும் சமன் கூட்டிச் சூரணித்து ஒரு வெருகடி வெந்நீரில் கொள்ளத் தீரும்.

3. கொல்லன் கோவை, வேலிப்பருத்தி, ஆடுதீண்டாப்பாளை இவைகளைச் சூரணித்து வெருகடி பிரமாணம் வெந்நீரில் கொள்ளத் தீரும்.

4. கோழியின் பிசு பிசுப்பான மலத்தை எடுத்து வெற்றிலையில் வைத்து ஒரு கிராம்பு சேர்த்து மடித்து மென்றுவிழுங்க விடமிறங்கும்.

5. எட்டி வேர்ப் பட்டையை கழற்சிக்காய் பிரமாணம் அரைத்து அரைக்கால் படி வெந்நீரில் கரைத்து மூன்று வேளை கொடுத்தும், கொட்டுவாயில் கத்தரிக்காயை சுட்டுக்கட்டியும் வர விடமிறங்கும்.

6. கொல்லன் கோவைக் கிழங்கை வெந்நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்க விடமிறங்கும்.

குறிப்பு :—நட்டுவக்காலி அதன் பேதமான மாரகார்த்தி மோகனூர்த்தி மிருகார்த்தி பெருங்காற்சம்மிதை விடத்திற்கும் அப்பிரக பற்பத்தை வெள்ளறுகுச் சாற்றில் கொடுக்கலாம்.

சிலந்திப்பூச்சி

சிலந்தி அழகாக கூடு பின்னுகிறது. இந்தப் பூச்சிக்கும் விஷமுண்டு. தன் வலையில் சிக்கும் ஈ, கொசு, சிறிய பூச்சிகளைத்தின்று வாழும். இதன் உடம்பில் சுரக்கும் விடநீர்கள் விரைந்து கொல்லும் விடத்தன்மை உடையதாக' இல்லாவிட்டாலும் நாள்பட பல நோய்களுக்குக் காரணமாகி விடுகின்றது. மிகுந்த நுண்ணுணர்வு உள்ள பூச்சி சிலந்தி என்றால் மிகையாது. தனக்கு வரும் ஆபத்தை முன் கூட்டியே தெரிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தது. தேளை வெகு சுலபமாக அடித்து விடலாம்; இதை அடிக்க வேண்டுமென நினைத்து கை ஓங்கும்போதே திட்டம் போட்டு வைத்துக் கொள்ளும்! அடி விழுவது சுவற்றிற்கு அல்லது தரைக்குத்தான். அடுத்த வினாடி ஒரு கெஜ தூரத்திற்கு அப்பால் போய் நிற்கும்.

இந்த சிலந்தி பூச்சியின் வரலாற்றை ஆராய்ந்த நிபுணர்கள் பல அதிசய உண்மைகளை எடுத்துரைத்து உள்ளனர். காற்றின் அதிர்வு, ஒலிகள் வரும் திசை, வேகம் இதனால் வலைக்கு சேதம் வருமா? அகப்பட்ட பூச்சியின் தன்மை வலிமை அவை யாவும் ஒரு நொடிப்பொழுதில் உணரக் கூடியதாம் இந்த சிலந்தி.

சிலந்தி இருபது விதம் எனச் சித்தர் ஆரூடம் கூறும். மற்றுமுள்ள சில நூல்கள், வாதப்பிணி குணம், கபப்பிணி குணம் இவைகளை முறையே உண்டாக்க ஒவ்வொன்றிலும் ஏழு ஏழாக இருபத்து ஒன்றும், தொந்தப் பிணிகளையுண்டாக்க ஏழும், ஆக இருபத்தெட்டென்றும், இவை தவிர வேறு ஒன்பது விதச் சிலந்திகள் உண்டு என்றும் கூறும். எட்டுக்கால் பூச்சியும் இதில் ஒரு பிரிவு. (தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

நவீன ஆய்வில் மூலிகைகள்

டாக்டர் (திருமதி) லலிதா காமேசுவரன், பிஎச்.டி.
ச. கோபாலகிருஷ்ணன், எம். எஸ்ஸி.
தனஞ்செயன், எம்.எஸ்ஸி.

தொல்பொருள் ஆராய்ச்சித்துறை வல்லுநர்களும் மொகன்சதாரோ, ஹரப்பா போன்ற நாகரீகங்கள் நல்வாழ்வுத்துறையில் பண்டைய குடிமக்கள் எவ்வளவு முன்னேறி இருந்திருந்தார்கள் என்பதைக் காட்டுவனவாக இருப்பதைச் சுட்டுகின்றனர்.

2. புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல; மற்றொரு பெரும் நன்மையும் இந்த மூலிகை ஆராய்ச்சியில் உண்டு; அதுதான் உண்மையிலேயே நஞ்சு வாய்ந்த செடிகளை நோய் தீர்க்கும் மருந்துகள் என்று மக்கள் தவருகக் கருதிப் பயன்படுத்தி உடல்நலம் கெடுத்துக் கொள்வதைத் தடுக்கும் ஒப்பற்ற பெரும்பணி! இந்த ஒரு பயனே, மூலிகைகளைப் பற்றிய நவீன ஆய்வுக்கு நம்முடைய முழுச் சார்பளிக்கப் போதுமானது.

3. மேலும் மூலிகையாராய்ச்சி நச்சு மூலிகைகளின் இயல்பை யறிந்து அதன் நச்சுத் தன்மைகளையே மருந்தாகப் பயன்படுத்தவும், தவறுதலாக அவ்வாறு இம்மூலிகைகளை யுண்டு, அதனுல் நஞ்சுற்று மாளப்போகும் மனிதர்களைக் காப்பாற்றுவதற்கு நச்சு எதிர்ப்புப்பொருட்களைத் தயாரிக்கவும், வழிவகைகளையறியவும், இம்மூலிகை ஆய்வு பெரிதும் பயன்படுகிறது.

மூலிகைகள் பற்றிய நம்முடைய அரிய அறிவு தொகுக்கப்பட்ட நூல்களாக அமைந்துள்ளன: ஆதிமருத்துவம் நம் நாட்டில் நம்முடைய முன்னோர்களிடையே, எந்நாட்டிலும் இல்லாத ஒப்பற்ற ஒரு முறையில் பரப்பப்பட்டு வந்திருக்கிறது. அது, இசை செறிந்த பாடல்கள் மூலம் இந்தப் பாடல்கள் சிதறடிக்கப்பட்ட இங்கொரு அங்கொரு துண்டுகளாக இல்லாமல் ஒப்பற்ற தொகுப்புகளாக அவை பாராட்டப்பட்டிருக்கின்றன.

அவற்றை சித்தர் பாடல்களில்,

அகத்தியர் இரண்டாயிரம்,
தேரையர் பாடல்கள்,

வைத்திய சிந்தாமணி,
சகரட்டிரயோகம், (மலையாளம்)
சரகசம்ஹிதா (வடமொழி)

என அடுக்கிக்கொண்டே போகலாம்.

தமிழ் மருத்துவர்கள் :

தமிழ் மருத்துவர்கள் உலகின் பலநாட்டு ஆதிமருத்துவர்கள் போல் தீய மந்திர சக்திகளுக்குக் கட்டுப்பட்ட மந்திர வித்தையாக தமிழ்நாட்டு மருத்துவத்தை ஆக்காமல் ஒப்பற்ற இறையறிவுள்ள பண்பாளர்களால் நெறிப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வருவதை அறியலாம்.

மூலிகைகளைப் பற்றிய நவீன ஆய்வு:

நவீன ஆய்வின் பெரும் கவனம் மூன்று பெரும் மருத்துவ ஆராய்ச்சிப் பகுதிகளில் செலுத்தப்படுகிறது.

நவீன மருத்துவத்தில் சில முக்கியமான நோய்களுக்கு, இன்னும் தீர்மானமான மருந்துகள் முற்றிலும் குணமளிக்கக்கூடிய மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை. உதாரணமாக ஈரல் சம்பந்தப்பட்ட மஞ்சள் காமாலை போன்ற நோய்கள், முடக்குவாதம், ஆஸ்த்துமா போன்றவை. இவற்றிற்கு மூலிகை ஆராய்ச்சி பெரும் பயன்தர வாய்ப்புகள் உள்ளன.

2. சில நோய்களுக்கு உதாரணமாக புற்றுநோய் போன்றவை, நோயின் ஆதாரமே இன்னும் சரியாக புலப்படாமல், கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் முற்றிலும் குணமளிக்க முடியாமல், சந்தேகத்தையே பகுதியாக உள்ளனவாக இருக்கின்றன. இத்துறையிலும், மூலிகை ஆராய்ச்சி பெரும் பயன்தர வல்லதாக இருக்கிறது.

3. சில நோய்களுக்கு, உதாரணமாக இரத்த அழுத்தம், நீரிழிவு, காசநோய்-இவற்றிற்கு நவீன மருந்துகள் நல்ல பலனளிப்பவையாக இருந்தும், இன்னும் சிறந்த மருந்துகள் கிடைக்காதா என்று பெரும் ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. மூலிகை ஆய்வு இந்தத் துறையிலும் பெரும் பலனளிப்பதாக இருக்கும்.

மூலிகை ஆய்வின் பெரும் பகுதிகள் :

தனித்துறை வல்லுநர்கள் (Specialists) பெருகிவிட்ட இந்த நாளில். ஒரு பெரும் பணியை பல சில முக்கியப் பணிகளாகப் பிரித்து வல்லுநர்களின் கையில் ஒப்புவித்தல், அந்தப் பெரும்பணியை மிகமிகச் சிறப்பாக ஆற்றமுடியும் என்பதை நன்கு உணர்ந்துவிட்ட இந்த

நாளில், மூலிகை ஆய்வும் பல முக்கியப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருப் பதில் வியப்பேதுமில்லை.

1. மூலிகைகளைப் பற்றிய குறிப்புகள்-மூலிகைகள் ஆகிய வற்றைச் சேர்க்கும் பிரிவு.
2. வேதியல் பிரிவு-வேதியல் ஆய்வுப் பிரிவு.
3. மருந்தியல் ஆய்வுப்பிரிவு.
4. மருத்துவப் பிரிவு.

மூலிகை ஆய்வை, அதன் பிரிவுகளை நன்குணர, அதனுடைய இயங்கு முறையைக் காண்போம்:

மூலிகைகளைப் பற்றிய குறிப்பு: மூலிகைகள் ஆகியவற்றை சேகரிக்கும் பிரிவு:

இத்துறையில் மருந்தியல் வல்லுநர்களும், தாவர இயல் வல்லுநர் களும் இருப்பர். இவர்களுடைய தலையாய பணிகள்:

வாசகர்கட்கு

சித்தர்கள், மூலிகைகள், உடல்நலம், சித்தமருத்துவம் பற்றிய புதிய அரிய செய்திகளை ஒவ்வொரு மாதமும் தாங்கி வரும் மூலிகைமணிக்கு நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்!

ஓராண்டு சந்தா	ரூ.	9
மூவாண்டு சந்தா	ரூ.	27
ஆயுள் சந்தா	ரூ.	251

என்று 'சந்தா'வை வாரி வழங்குங்கள், ஏற்கனவே சந்தா சேர்ந்த அன்பர்கள், தன் பங்குக்குக் குறைந்த பட்சம் மூன்று புதிய சந்தா அன்பர்களைச் சேர்த்துக் கொடுங்கள்.

மூலிகை மணி உங்கள் பத்திரிகை! அதன்

▽ வாழ்வு
▽ வளர்ச்சி
▽ வெற்றி

உங்கள் திருக்கரங்களில் உள்ளது. சந்தா சேர்ந்தும், புதிய சந்தா அன்பர்களைச் சேர்த்தும், மறைந்திருக்கும் மூலிகை களின் மாண்பினை, 'மூலிகை மணி' மூலம் ஒலிக்க - உங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டுங்கள்.

ஃ ஏற்கெனவே நவீன ஆய்வில் இடம்பெற்ற, இடம் பெறுகின்ற மூலிகைகளைப் பற்றிய குறிப்புகள் அனைத்தும் சேகரித்தல்.

ஃ பழைய சுவடிகள், பாடல்கள், நாட்டின் பல பாகங்களிலிருந்து பலரைக் கண்டும், கேட்டும் மூலிகைகளை பற்றிய குறிப்புகள் சேர்த்தல்.

ஃ மூலிகைகள் பலவற்றிலிருந்து, பயன்தரும், ஆய்வுக்குத் தகுந்த, மிகுந்த ஆய்வு வாய்ப்பளிக்கும் மூலிகைகளைப் பொறுக்குதல்.

ஃ அந்த மூலிகைகளைத் தாவர இயற்படி சரியாக அடையாளம் கண்டு பின் சேர்த்தல். Botanical Identification & Collection.

ஃ தாவர இயல் பிரயாணங்கள் மேற்கொண்டு, அதன்படி கிடைக்கும் அரிய மூலிகைகளைச் சேகரித்தல்,

ஃ சேர்த்த மூலிகைகளை மருந்தியலார் ஆலோசனைப்படி, வேதியல் வல்லுநர் ஆலோசனைப்படி தக்கவாறு பதப்படுத்துதல்-அல்லது வேதியற் பிரிவிற்குச் சேர்ப்பித்தல்

ஃ வேதியல், மருந்தியல், மருத்துவப் பிரிவுகளில் நடைபெறும் பயனுள்ள ஆய்வுகளில் பெரும் ஆர்வம் காண்பித்தல் முதலியன.

வேதியல் பிரிவு :

இந்தப் பிரிவிலும், வேதியல் வல்லுநர்கள், மருந்தியல் வல்லுநர்களுடன் இணைந்து செயல்படுவர். இவர்கள் கீழ்க்கண்ட பெரும்பணிகளைச் செய்வர்:

ஃ மூலிகைகளின் வீரியத்தைப் பல திரவங்களின் கரை, திறனைக்கொண்டு பிரிப்பர். (தொடரும்)

இதயத்தின் ரகசியங்களை உணர்ந்து அதை எவ்விதம் இயக்குவது என்பதை நெல்லிக்கனி வாயிலாகச் சித்த மருத்துவம் நமக்கு இக் கட்டுரை வழி உணர்த்துகின்றது.

இதயத்துக்குகந்த கனி

-ஸீயார்

"கனிகளிலே அவள் மாங்கனி" என்று திருப்பாவை மாங்கனியைச் சிறப்பித்துக் கூறினாலும் இதய பலத்துக்கு மிகவும் ஏற்றது நெல்லிக்கனி. அதியமான் இதை உணர்ந்தே நீண்ட நாள் வாழத் தனக்கு அற்புதமான கருநெல்லிக்கனி கிடைத்ததும், பெருந்தன்மையோடு அதை ஔவைப் பிராட்டிக்கு அளித்து அவரை உண்ணச் செய்தான். இதயத்துக்கு இன்னமுதமாக விளங்கும் இந்த அற்புதக் கனியைப்பற்றி எவ்வளவு உண்மைகள் மறைந்துள்ளன!

நெல்லிக்கனியை வடமொழியில் ஆமலகம் என்கிறோம். மேனாட்டுத் தாவரவியல் முறைப்படி இதன் பெயர் எம்பிலிகா அஃபிஸினாலிஸ் (Emblica officialis). முதிர்ந்த நெல்லிக்கனி பச்சையும் மஞ்சளும் கலந்த நிறத்தில் பளபளப்போடு, ஆறு அழகிய துண்டுகள் அடங்கிய உருண்டைக் கனியாகக் காணும், சற்றுத் துவர்ப்பாக இருந்தாலும் இதன் சதைப்பற்றைச் சுவைத்துச் சாப்பிட்டதும் ஒரு குவளை தண்ணீர் அருந்தினால் அந்த இன்சுவையை ரசித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

இதயக் கோளாறு உள்ளவர்களுக்கு, ஆங்கில இதயநோய் நிபுணர் ஒருவர் கூறும் அறிவுரைகளைக் கவனிக்க வேண்டும். நெல்லிக்கனிக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர் கூறிய உண்மைகள் நமக்கு வியப்பை அளிக்கும்.

"நெல்லிக்கனியின் ரசத்தில், வைட்டமின் சி சத்து ஆரஞ்சில் இருப்பதைவிட 20 மடங்கு அதிகம் உள்ளது. ஒரு சிறு நெல்லிக்கனியை உண்பது, இரண்டு ஆரஞ்சுப் பழங்களை உண்பதற்குச் சமம். தொற்றுநோய் தடுப்புச் சக்தியைப் பெற நெல்லிக்கனி உண்பது மிகவும் சிறந்தது. ரத்த நாளங்களில் சிதைவு ஏற்பட்டு ரத்தக் கசிவு ஏற்படுவதைத் தவிர்க்கும் அபூர்வ சக்தி நெல்லிக்கனியின் ரசத்துக்கு உண்டு. கொழுப்புப் பொருளைக் (கொலஸ்ட்ரால்) கரைக்கும் தனித்தன்மையும் இதற்கு உண்டு" என்கிறார் அந்த ஆங்கில மருத்துவ நிபுணர்! ரத்தம் சீராகப் பாய்வதைத் தடுக்கும் கொழுப்புப் பொருளை நெல்லிக்கனி ரசம் கரைத்துவிடுவதால் இதயத்துக்கும் பலம் அளிக்கும் இன்னமுதமாக இதைக் கருதலாம்.

ரத்த சோகையைக் குணப் படுத்தும் அருங்கனி நெல்லிக் காய். ஆருத ரணத்தை ஆற்றுவ துடன், எலும்பு முறிவைச் சீராக்கி, குடல் ரணத்தையும் குணப்படுத்துமாம்.

பெண் மருத்துவர் ஒருவர் கர்ப் பிணிகளைத் தினமும் நான்குநெல் லிக்கனி சாப்பிடச் சொன்னர். என்ன காரணம்என்று விசாரித்த போது, "பிரசவம் எளிதாக இருப்பதற்கு இது ஏற்றது. தவிர, தாய்ப்பால் சுரக்க நெல்லிக்கனி வகை செய்கிறது" என்ற பதில் கிடைத்தது. இதன் அமிலச்சத்து மலச்சிக்கலை நீக்கும். ஹெமரேஜ் என்ற ரத்தப்போக்குக்கும், அஜீர் ணத்தால் ஏற்படும் வயிற்றுப் போக்குக்கும் ஏற்ற கனி இது.

ரத்தசோகை, மஞ்சள்காமாலை, உணவில் வெறுப்புநிலை, தீராத இருமல் இவற்றுக்கு இதைப் பயன்படுத்துகிருர்கள்.

திரிபலா சூரணத்துக்கு நெல் லிக்கனியை அவசியம் உபயோ கிக்க வேண்டும். கல்லீரலைப் பலப்படுத்திச் சரிவர இயங்கச் செய்யும் சக்திபெற்றது நெல்லிக் காய்.

ஆசியாவில் அதிகம் விளையும் இந்த அற்புதக் கனியை மேனுட் டவரும் சிறப்புணர்ந்து மருத்து வத் துறையில் பயன்படுத்து கிருர்கள். எளிதாகவும் குறைந்த விலைக்கும் கிடைக்கும் இந்த அற்புதக் கனியை நம்நாட்டுக் காடுகளிலும், வீட்டுத் தோட்டங் களிலும் அதிகம் காணலாம்.

"பெரிய பெரிய ரசகுண்டு போன்று கண்ணுக்கு அழகான நெல்லிக்காயைப் பார்க்கவேண்டு மானுல் நீங்கள் வாரணுசிக்கு வாருங்கள்! இதோ பாருங்கள் வாரணுசிக் கனியை!" என்று வடஇந்தியர் ஒருவர் காட்டிய நெல்லிக்கனியைப் பார்த்தேன்: சுவைத்தேன். அது இங் குள்ளதைவிட வடிவிலும் பெரி யது; சுவையிலும் சிறந்தது.

அகால நரையைக் குணப் படுத்தும் அற்புத சக்தி நெல்லிக் கனிக்கு இருக்கிறது. கூந்தல், ஷாம்பு ஆகியவற்றைத் தயாரிப் பதற்கும் இது பயன்படுகிறது. அச்சுத் துறைக்கான மை ரகங் கள் (Printing Inks) தயாரிக்க வும் நரைமயிர்ப் பூச்சுக்கான 'ஹேர் டை' தயாரிக்கவும்'அம்ல' ஏற்றது.

மருத்துவர்கள் ஆஸ்த்மா நோயைக் குணப்படுத்த இதன் விதைகளைப் பொடி செய்து உண் ணச் சொல்கிருர்கள்.

இதன் கனியும் கொட்டையும் பயன்படுவதோடு, பட்டையை யும் இலைகளையும் தோல் பத னிடும் தொழிற்சாலைகளும், வெகு வாகத் தங்கள் பணிக்கு இதைப் பயன்படுத்துகின்றன.

நெல்லிக்கனியை இந்துக்கள் சிறப்பாகப் போற்றுகிறார்கள். நெல்லி மரத்தை வழிபடுவதும் உண்டு. அக்ஷயநவமி பண்டிகையன்று வனபோஜனம் செய்பவர்கள் நெல்லி மரத்தின் அடியில் அமர்ந்து கூட்டமாக உணவு உண்பதைப் புனிதமாகக் கருதுகிறார்கள். இதைவிட, முதல்நாள் உபவாசம் முடித்து, உணவு உண்ணத் தொடங்கும்போது முதலாவதாக நெல்லிக்



கனியையோ, அல்லது உலர்ந்த நெல்லிக்கனியை அரைத்து மோரில் கரைத்தோ உண்டபின்போ,மற்றப்பதார்த்தங்களைச் சாப்பிடுகிறார்கள். இது உடல் ஆரோக்கியம் தரும்; ஊறுகாயாகவும் உலர்த்தி வைத்தும் உபயோகப்படுத்த ஏற்றது. சியவனப் பிராசம் தயாரிக்க இந்தக் கனி பெரிதும் பயன்படுகிறது.

சித்த மருத்துவத் துறையில் அநுபவம் வாய்ந்த கோவை திரு. சாமிகிரி சித்தரிடம் இதன் மகிமையைக் கேட்டபோது சொன்னார்.

"உள்ளங்கையை விரித்தபடி வைத்துக்கொள்ளுங்கள்! உங்களுக்கும் இங்கே கூடி உள்ளவர்களுக்கும் உண்மையைச் சொல்கிறேன்.

"எந்த உறுப்பின் மீது நாம் அதிக அக்கறை செலுத்துகிறோமோ அந்தஉறுப்புக் கெட்டுவிடும் என்று பொருள்படும் கீதை வாசகம் ஒன்று உண்டு; அதற்காக அந்த உறுப்புப் பழுதடைந்தால் நாம் அதை கவனிக்காமல் இருக்கமுடியுமா? பாரிச வாயு சிலருக்கு உடலெங்கும் பரவி ஓயாத குத்து வலியும் ஆங்காங்கே பிடிப்பும் ஏற்படுத்தி வாட்டும்.

"ஆரம்பத்தில் இப்படி ஏற்படும் வாயுப் பிடிப்பு, கிழங்கு வகைகள், பட்டாணி இவற்றை உண்பதால் வாயு அதிகமாகி இதய ரத்த நாளங்களில் வந்தடைந்து அடைத்துக்கொண்டு பளீர் பளீர் என்று திடீர் வலியைத் தோள் பகுதிகளிலும் நெஞ்சிலும் உண்டாக்கும். இதயத்தைக் கெடுக்க இந்த வாயுத் தொந்தரவு முதல் கட்டம். இதைத் திடீரென்று குணமாக்கும் சக்தி தேனுக்கு மட்டும் உண்டு. இந்தத் தேனை அடிப்படைப் பொருளாகக் கொண்டு சித்த

வைத்திய முறையில் முதிர்ந்த நெல்லிக்கனிகளைப் பயன்படுத்தி இதயத்துக்கு இன்னமுதம் தயாரிக்கலாம். முதிர்ந்த பெருநெல்லிக்காயை அப்படியே முழுமையாகக் கொம்புத் தேனில் இட்டு, அதோடு குங்குமப் பூ, ரோஜா இதழ், நார்த்தம் பழச் சாறு, முத்து பஸ்பம், பவள பஸ்பம், கற்பூரம், கொத்தமல்லித் தழைச் சாறு, செந்தாமரைப்பூவின் சாறு, கடுக்காய், ஏலக்காய் ஆகியவற்றைச் சேர்த்து ஒரு மண்பாண்டத்தில் இட்டு, தேனை நிரப்பி, ஆறு வருஷகாலம் ஊறவைக்க வேண்டும். அந்த வெப்பத்திலேயே நெல்லிக்காய் ஊறி, குலோப்ஜாமுன் மாதிரி கனிந்து மென்மையாகிவிடும். அதை மூன்று மண்டலம்(144 நாட்கள்) காலை ஒரு நெல்லிக்காய், மாலை ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் இதய சம்பந்தமான நோய்கள் விரைவில் குணமாகிவிடும்; ரத்தக் குழாய்களும் வலுவடையும். செரிமான அழுத்தும் சக்தி இல்லாத அவை சீர்படும். அங்கே ரத்தம் பாயத்தடை இருந்தாலும் இந்தத் தேனமுத நெல்லிக்கனி பூரணமாகக் குணப்படுத்தும். இதயவலி, பிடிப்பு இருந்தாலும் குணமாகும். நீண்டகாலமாக ஊறிய தேன் இதயத்துக்கு வலுவைத் தரும். அந்தச் சாதனங்கள் அணுமயமாக மாறி ரத்த விரைவு அணுக்களில் (ஹெமோக்ளோபின்) சேர்ந்து நரம்பு மண்டலத்தையும் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும் சக்தி வாய்ந்தவை என்று விளக்கம் கூறிவிட்டு உள்ளங்கையை மூடச்சொன்னர்.

"ஏன்?" என்றேன்.

"உள்ளங்கை நெல்லிக்கனி போல் உண்மைகளைக் கூறிப் புரியவைத்தாகிவிட்டது. இனி உள்ளங்கையை மூடுங்கள். இப்போது அதைப் பாருங்கள்! அங்கே என்ன வடிவம் தெரிகிறதோ அதுவே உங்கள் இதயத்தின் வடிவமும் ஆகும். ஆக, உள்ளங்கை, நெல்லிக் கனிக்கும் உங்கள் இதயத்துக்கும் நெருங்கிய தொடர்புஉண்டு என்பதைப் புரிந்துகொண்டீர்களா?" என்று கேட்டார் சித்தர். ஆம்! என்று தலை தானுக அசைந்தது.

அந்த அருமருந்தான நெல்லிக்கனியைச் சுவைத்துப் பார்த்தேன். கடிக்க வேண்டிய சிரமமின்றி அவ்வளவு மிருதுவாக ஊறிப்போய், துவர்ப்பே இன்றி இனித்தது. பகலில் சாதாரண நெல்லிக்காயைச் சாப்பிடுவது நல்லது. இரும்புச்சத்து மிகுந்த அற்புதக்கனி; ரத்தத்தில் இரும்புச்சத்தை நீடிக்கச்செய்தே இதய நோயைக் குணமாக்குகிறது. நெல்லிக்கனி.

—நன்றி : மஞ்சரி
மார்ச் '78

சென்ற இதழ் தொடர்ச்சி

சித்தர்களில் சிலர்

2. பூண்டிச்சாமியார்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

ஒவ்வொரு சித்தருக்கும் என்றதால் இவரின் வேறு அனுபவங்களை யும் அறியவேண்டும் என்ற ஆசையெழுந்தது. பூண்டி சுவாமிகள் பற்றி அவ்வளவுதான் தெரிந்துகொள்ள முடியும் எனத்தெரிந்துகொண்டேன். ஆன்மீகத்துறையில் உயர்ந்த சித்தர்கள் பற்றியும் ஞானிகள் பற்றியும்- அவர்களது சக்திகளை எடைபோட்டுப் பார்த்து எண்ணங்களைக்கொள் வது பெரும் தவறுடையது என்பது இவரது கருத்து. இதைப்புரிந்து கொண்டபின் சுவாமிகளின் அருள் விளையாட்டுக்கள் பற்றியும், அனுப வங்களைப் பற்றியும் மேலும் சொல்லுங்கள் எனக் கேட்கத்தோன்ற வில்லை. விரும்பவும் இல்லை. காரணம் நம்பிக்கைதான்.

சிலர் கடவுள் என்று நம்புகின்ற வடிவத்தையே கல்லென்று மிதிக் கின்றவர்களும் உண்டு அல்லவா?

சித்தர்கள்-அவர்களது அருள்விளையாடல்கள்-அனுபவங்கள் அத் துணையும் நம்பிக்கைதான்! ஆனால்-பொய்யாகாத நம்பிக்கை. ஆன்மீக அனுபவச் சுரங்கமாகிய திரு. செல்வராமனை எளிதில் விட்டுவிட மனமு மில்லை. அவரது அருள் அனுபவங்களைக் கொள்ளையிட ஆசைப்பட் டேன், அவர் தாராளமாக அள்ளியே கொடுத்தார்.

'உங்களுக்கு வேறு யார்யாருடைய தொடர்புண்டு?' கேள்வி என்னுடையது.

'ஏறக்குறைய பத்துவருஷத்துக்கு முன்னாலே, எனக்கு முப்பத் தைந்து வயதிருக்கும்.'

'முன்னொரு காலத்திலே ஒரு ஊரிலே' என்று 'முன்பெல்லாம், சுவையான கதைசொல்லும் பழக்கம் நம்மூர்ப் பாட்டிமாரிடம் இருந்தது. அதுபோல் சுவையான சம்பவம் ஒன்று வெளிவரப்போகிறது என நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

சில திரைப்படங்களில் Flash Back என்பார்கள். புதிய கதையின் நடுவில் பழைய நினைவுகளைக் காட்டுவது.

அப்படித்தான் தொடங்கினார்.

'சிதம்பரம் மிராசுதார் திரு. வாகீசம்பிள்ளையும் நானும் திரு. பலராமையாவிடம் ஒரு மருத்துவ யோசனைக்குப் போனோம். ஆலோசனைக்குப் பிறகு அவர் தான் கண்ட சித்தர்கள் சிலரைப்பற்றிக் கூறினார். அவர்களில் ஒருவரான தயாசதன் சித்தர் என் மனத்தை மிகவும் கவர்ந்தவர். நான் நேரே சென்றேன். சென்னை ஓட்டேரியில் ஒரு வீதியில் சாக்கடையோரத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். பார்வையிலேயே அவராகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவுசெய்தேன். பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் என்பதற்காக இரண்டு இட்டிலி வாங்கி வந்து கொடுத்தேன். வாங்கிக்கொண்டு என்னை மேலும் கீழும் பார்த்தார். 'என்னை பரிசோதனை செய்ய வந்திருக்கிறாயா?' என்பது போல இருந்தது அந்தப்பார்வை. இட்லியை வாங்கினார். சாம்பாரில் பிசைவதைப்போல சாக்கடை நீரில் நன்றாகப் பிசைந்தார். வாயில் போட்டுக்கொண்டார். பிறகு என்னைப் பார்க்கவில்லை. அடுத்தநாள் வீட்டில் இருந்து சாப்பாட்டை 'கேரியரில்' கொண்டுபோனேன். சாம்பாரேது? சாக்கடை நீரேது? எல்லாம் ஒன்றுதான். அசந்து போனேன். பாகுபாடு செய்யும் அறிவு எங்கே? அருவெறுப்பைத் தோற்றுவிக்கும் மனம் எங்கே? சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்களுக்குச் சாம்பாரும் சாக்கடைநீரும் ஒன்றாகத்தான் தெரியும்போல இருக்கு. அடுத்த நாளும் விடவில்லை. வீட்டுக்குக் கூட்டிவந்தேன். நன்றாகக் குளிப்பாட்டினேன். சற்றுநேரத்திற்கெல்லாம் வீட்டைவிட்டு வெளியே அவசர அவசரமாக வந்தார். தேடிப்பிடித்து சாணியை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு வந்து நின்றார்; அப்படிப்பட்டவர். அவரைப் பின்னர் தயாசதனில் சேர்த்தோம். 'ஜிதாரேகா' என்ற ஒரே ஒரு சொல்தான் அவர் வாயில் இருந்து வரும்!

'அப்படின்னா என்ன பொருள்' அவரது வேகத்தைத் தடுப்பது போல் ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தேன். 'தெரியவில்லை' இந்தி போல இருக்கு. அதுபற்றிச் சிந்தித்தது இல்லை. சிலர் நல்ல பொருளாகக் கொண்டுவந்து கொடுத்தால் சில சமயங்களில் வீதியில் விசியெறிந்துவிடுவார். சில சமயம் அழுகிய பொருளாக இருந்தாலும் உண்பர். யாராவது காசு, ரூபாய் நோட்டுக்கள் கொடுத்தால் கூட விசிவிடுவார். அல்லது விழுங்கிவிடுவார். அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது எனக்கு இராமலிங்க அடிகளார்தான் நினைவுக்கு வந்தார்,

பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்
கண்டனன் இனிச்சொல்வ தென்னே.

II-பிள்ளைச்சிறுவிண்ணப்பம்

வள்ளலார்கூட அப்படித்தான் வீசி எறிந்தாராம். திருநாவுக்கரசர்கூட 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்' வளம்பெற்றிருந்ததைச் சேக்கிழார் போற்றுகிறரே. தமது மிஷனுக்காக தன் அன்பர் ஒருவர் தந்த பலலட்சம் ரூபாய்களையும் வேண்டாம் என ஒதுக்கினர் இராம கிருஷ்ணர் என்பதையும் கேள்விப்பட்டிருக்கிறேமே. ஞானிகள் எல்லாரும் சிந்தனையிலும் செயலிலும் ஒன்றுபோலத்தான்போலும். காலத்தாலும் இடத்தாலும் பெயராலும்தான் வேறுபட்டவர்கள்.

நான் அமைதியாக இருப்பதைக் கவனித்தார். 'என்னங்க நீங்க நம்பவில்லையா? கொஞ்சம் இருங்க'...சொல்லிக்கொண்டே எழுந்து அருகில் இருந்த இரும்பு பீரோ அருகில் சென்று அதைத் திறந்தார்.

'சே சே......அதெல்லாம் இல்லை. இராமலிங்க சுவாமிகளது பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது' என்று சொல்லி அப்பாடலை விளக்கினேன். கேட்டுக்கொண்டே ஒரு பொட்டலத்தைக் கொண்டுவந்தார். அதில் சிறுசிறு பொட்டலங்கள் இரண்டு மூன்று இருந்தன. ஒரு பொட்டலத்தின் மேல் Swallowed on 27-4-75 Received on 30-4-75 என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. பொட்டலத்தைப் பிரித்தார்

X/85-990527, 990529 என்ற எண்களையுடைய ரூபாய் நோட்டுக்கள் சற்றுமங்கிய நிலையில் இருந்தன. வேறு ஒரு பொட்டலத்தில் X/85 990594 என்ற எண்கொண்ட ரூபாய் இருந்தது. இப்படியாக ஒன்று, இரண்டு ரூபாய் நோட்டுக்களும் காசுகளுமாகச் சுமார் 50 ரூபாய்க்கு வைத்திருந்தார்.

இவை எனக்குப் புதிதாகத் தோன்றியது. நோட்டுக்கள் ஏறக்குறைய ஒருவாரம் வயிற்றுக்குள் இருந்துவிட்டு அப்படியே வெளிவருகிறது என்றால் ஒரு விந்தைதானே!

'நீங்க கொடுத்த நோட்டுதான்னு எப்படி நம்புவது?'

ஒரு சந்தேகத்தைக் கிளப்பினேன்.

'அந்தத் தயாசதன் காவலாளியிடம் சித்தரிடம் கொடுத்ததைப் போல் இருமடங்கு தந்து 'நீ' அதை எடுத்துவை' என்பேன்.

எனது சந்தேகத்தைப் போக்குவதுபோல உடனே ஒரு பதிலைச் சொன்னது வியப்பை உண்டாக்கியது. நியாயமான விடையாகவும் தோன்றியது.

ஓய்வே தேவையில்லாதவரைப்போலத் தொடர்ந்தார்.

'அவரது இடதுகை சற்று ஆடிய வண்ணம் இருக்கும், வலதுகை சற்று மேலே தூக்கிக்கொண்டிருக்கும். 1968-ல் தான் முதன் முதல் இந்தச் சித்த புருஷ தரிசனம் கிடைத்தது. அவர் 1972-ம் ஆண்டு நவம்பரில் சமாதியானர் என்று நினைக்கிறேன்.

அப்புறம் வேறு யாரேனும்?....

'1969-ஆம் ஆண்டு இலஞ்சி சிதம்பரபிள்ளை M.L.A. அவர்கள் மூலம் கன்னியாகுமரி 'மாயி' தரிசனம் கிடைத்தது. திரு. செயராம ரெட்டியார் M.L.C. அவர்களுடன் சென்றேன். பொதுவாகச் சித்தர்கள் எல்லாம் நாயுடன் தொடர்புகொண்டவர்கள் என்பது என் எண்ணம்.'

'ஆமாம், நான்கூட கேள்விப்பட்டிருக்கிறேன். பொள்ளாச்சி கோடி சுவாமிகூட ஒருமுறை ஜமீனிடம் நாற்பது சித்தபுருஷர்களுக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொன்னாராம். இலையெல்லாம் பரிமாறிய பிறகு நாற்பது நாய்கள் ஓடிவந்தனவாம். சுவாமிகள் முறைப்படி உபசரித்தனுப்பினாராம். அருகில் இருந்தவர்களுக்குக் கையும் ஓடவில்லையாம். காலும் ஓடவில்லையாம்.

'பார்த்தீங்களா...... அதுதான் உண்மை. 'மாயி' எப்போதும் நாய்கள் புடைசூழவே இருப்பார். ஒருமுறை மொழிபெயர்ப்புத்துறையில் இயக்குனராக இருந்து ஓய்வுபெற்ற திரு. கு. ராஜவேலுவும், E.N.T. மருத்துவர் திரு. சத்தியநாராயணனும் அவர் துணைவியாரும் சென்றிருந்தோம். 'மாயி' மேலாடையின்றி இருப்பதுகண்டு ஒரு டவலை எடுத்துப் போர்த்தினர் டாக்டர். மாயியின் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை. சற்றே மேல்நோக்கிய பார்வை. களங்கமும், கலக்கமும் அறியாத முகம். 'மாயி' என்றால் 'உம்' என்பார் அவ்வளவுதான். ஊரார் எல்லாம் நூறுவயது இருநூறுவயது என்கிறார்கள். ஆனால் எழுபது வயது உறுதியாக இருக்கும். மற்றபடி நடைஉடை பாவனை எல்லாமே ஐந்துவயது குழந்தை போலத்தான். சித்தர்களுக்கெல்லாம் இந்தக் குழந்தைத்தனம்தான் இலக்கணம்.'

'உண்மைதான், உண்மைதான்' எனக்குள் கூறிக்கொண்டேன்.'

'சேய்போல் இருப்பர் கண்டீர்! உண்மை ஞானம் தெளிந்தவரே!' பட்டினத்தார் தரும் விளக்கமும் அதுதானே.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூட தமது சோதிடர் திரு. P.T.சுந்தரம் அவர்களுடன் சென்று வணங்கிவந்ததாகக் கேள்விப்பட்டேன், 'நான் பார்த்த சித்தர்களிலேயே அபூர்வ குணாதிசயங்கள் கொண்டவர் அவர்.'

'அடுத்த சித்தரைப்பற்றி'...... பச்சைக்கொடி காட்டினேன்.

'காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலிலே ஒருத்தர் இருக்கார். பார்த்திருக்கிறீர்களா?

'இன்னமும் பார்க்கவில்லை. ஆனால் நிறைய கேள்விப்பட்டிருக்கேன்!

'நான் அழைத்துக்கொண்டுபோகிறேன். அவருக்கு என்று ஒரு கேரக்டர். கோயிலுக்குள்ளே எங்கே வேணும்னாலும் சுற்றிக்கிட்டு இருப்பாரு. அன்போடு அவரிடம் ஆசிவாங்கப்போனால் 'கண்டபடி' வார்த்தைகளைப் பயன்படுத்தி விரட்டுவார். சில வேளைகளில் சிலர் இவரை மதிக்காமல் பொருட்படுத்தாமல் இடித்துக்கொண்டு செல்கின்றனர், ஒன்றும் சொல்லமாட்டார். வெற்றிலை, பாக்கு எச்சில் படிந்த அழுக்குத்துணிதான் உடுத்தியிருப்பார். புதுத்துணி யாரேனும் கொடுத்தால் கிழித்து எறிந்துவிடுவார். அல்லது அருகே இருப்பவர்களுக்குக் கொடுத்துவிடுவார். சிலசமயம் குளத்தில் மூழ்கி அப்படியே வெளியே வந்து அதே ஈரஉடையுடன் அமர்ந்துகொள்வார். இத்தகைய பெரும் சக்தி புதைந்துள்ள சித்தர்களின் பார்வை ஒன்று பட்டால் போதும் என்பதோடு வந்துவிடுவேன்,'

'நான் 'இல்லையானால் நீ இல்லை' என்று 'பால்சீம்' என்ற யூதர் சொன்னாராம். நான் இருக்கிறதே உனக்காகத்தான் என்பது மட்டுமல்ல உன்னால்தான். அதுபோல நீ இருக்கிறது என்னால் என்பதல்ல, எனக்காக. 'எந்தவித ஆசாபாசங்களும் படியாத நிர்மலமான மனத்தை உடைய யாருமே எதையும் வேண்டமாட்டார்கள்,' 'வேண்டத்தக்கது அறிவோய் நீ! வேண்டும் வரம் அருள்வோய் நீ!' என்பது வாக்கு இல்லையா? தாய்க்குத் தெரியும் குழந்தைக்கு எந்த நேரத்தில் எந்த வகையான உணவு தருதல் வேணடும் என்று குழந்தை அழுகிறது என்றாலும் தாய் உணவு தரவில்லையானால் கொடுமையால் அல்ல, அசீரணம் காரணமாக இருக்கலாமல்லவா? அதுபோலத்தான் நான் அறிய முற்படுகிறேன். 'தன்னை யறிந்தின்ப முற வெண்ணிலாவே,' ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே' என்று இராமலிங்கசுவாமிகள் பாடுகிறாரே. அதுபோல! என்னைப்பற்றிச் சித்த புருஷர்கள் அறிவார்கள். அவர்களுக்கு முன்னால் நான் ஒரு குழந்தை. அழும் குழந்தைக்கு மட்டும் தாய் உணவளிக்கமாட்டாள், அழ வலிமையில்லாக் குழந்தைக்கும் அளிப்பாள். அப்படி நான் அவர்களுக்கு முன்னால் அமைதியாக நின்றுவிடுவேன்.''

இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது நான் சற்று உணர்ச்சிவசப்பட்டுப்போனேன். அனுபவங்களை சொல்லிக்கொண்டிருப்பவர் யார் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தேன். மிகப் பெரும் செல்வமும் செல்வாக்கும் உடைய ஒருவர் 'ஒரு பைத்தியத்தின்' முன்னால் குழந்தையாகத் !தன்னை நினைத்துக்கொண்டார் என்றால், அப்படிச் சொல்வதற்கே ''இந்த உலகில் ஒரு துணிவுவேண்டுமே.'' தன்னை மறந்து, தன் நாமங்கெட்டு தலைவன் தாளையே நினைத்திருக்கின்ற அருள்உலகப் பித்தர்கள் முன் அவ்வாறே நிற்பது என்பது மிகப்பெரிய சாதனைதானே. கோயிலுக்கு வருகிறவர்களில் எத்தனை பேர் அஷ்டஅங்கமும் படுமாறு வணங்கி எழுகின்றனர்? எத்தனைபேர் தலையில் குட்டிக் கொள்கின்றனர்? எத்தனைபேர் தோப்புக்கரணம் போடுகின்றனர். எத்தனைபேர் நவக்கிரகங்களையும் ஒன்பதுமுறை சுற்றி வருகின்றனர்? 'பிரிஸ்டீஜ்' பார்க்கிறார்களே! அக்கம்பத்தில் யாராவது பார்த்துட்டால்' என்னடா இவர் இப்படி ''அநாகரிகமாக'' நடந்து கொள்ளுகிறாரே என்று அச்சம்! கடவுளைக் கும்பிடுவதிலும் ஒரு 'ஜென்டில்நஸ்.' 'இந்தக்காலத்தில்......' உள்ளபடியே நான் பெருமிதம் அடைந்தேன்.

செல்வர்களுக்கோ செல்வாக்கு உடையவர்களுக்கோ நான் பணிந்தது இல்லை என்பதை என்னைப்போன்ற எண்ண அலைகள் கொண்ட நண்பர்கள் சிலர்-என்னை அறிந்தவர்கள்-அறிவர். அதேபோல சித்தர்

கள் பற்றி அறியும் வேட்கையுடன் பித்தம் பிடித்தவர்களுக்கு நான் அடிமையாவதில் பெருமை கொள்பவன் என்பதையும் அறிவர். திரு. செல்வராமனைக் காணுவதில்—சித்தர்கள் பார்வைபெற்ற ஒருவராக—ஒரு மனநிறைவைப் பெற்றேன்.

காஞ்சிபுரத்தில் உள்ள சித்தரைப்பற்றி மேலும் தொடர்ந்தார்.

'ஒருமுறை நான் அவர் மேலாடை அழுக்காக இருக்கிறதே என்று எனது சரிகை மேலாடையைக் கொடுத்தேன். என்னைக் கண்டபடி வைது 'எடுத்துக்கிட்டுப்போடா' என்றார். அவர் அல்வாவை விரும்பி உண்பது உண்டு. நான் வழக்கம்போல ஒருநாள் வாங்கிப்போனேன். அன்றைக்குச் சற்றும் எதிர்பாராத வண்ணம் கீழே வீசி எறிந்துவிட்டார். எனக்கு அது அதிர்ச்சியைத் தரவில்லை. ஏனென்றால் அச்செய்கையையும் எதிர்பார்த்தவன்தான். ஆனால் வீட்டுக்கு வந்ததும் எனது மாமனார் திரு. லோகநாதமுதலியார் இறந்துவிட்டார் என்ற சேதிவந்தது. இனிப்பை மண்ணாக்கியதற்கும், பொன்னான தேகம் மண்ணாவதற்கும் தொடர்புபடுத்த விரும்பவில்லை. இரண்டும் இரண்டுவேறு நிகழ்ச்சி என்றுதான் நினைக்கிறேன். ஆனால் சிலர் இரண்டையும் இணைத்துச் சொன்னார்கள்!' அவர் சற்று நிறுத்தினார். எனது கருத்தை எதிர்பார்ப்பதைப் போல இருந்தது.

'இருக்கலாம்' ... என்றேன். அவரவர் மனப்பக்குவத்தைப் பொருத்ததுதானே. பக்குவ ஆன்மாவின் பக்குவப்பட்ட நினைப்பு அது!

'கசவனம்பட்டியில்கூட......' அடுத்த சித்தர் பற்றி அறிந்து கொள்ள நான் போட்ட பீடிகை இது.

'ஆமாம்...'ஆமாம்... நான்விட்டதில்லை அங்கேயும் போயிருக்கிறேன். 1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் என நினைக்கிறேன்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளும், காவல்துறையில் பெரிய பதவியைத் தாங்கி திறம்பட நடத்துபவரான திரு. பொன்.பரமகுருவும், எனக்குக் கசவனம்பட்டியைப் பற்றிச் சொன்னார்கள். நான் பார்க்கும்போது ஒரு வயல்வெளியில் பாழடைந்த சிறு கோயில் ஒன்று இருந்தது. அதற்கு வெளிப்புறத்தில் அமர்ந்துகொண்டு சிறு கற்களை பொறுக்கி இங்கேவைப்பது பிறகு வேறுஇடத்தில் வைப்பது. அதையெடுத்து மீண்டும் அருகில் வைப்பது இப்படிச் செய்துகொண்டிருந்தார். இந்தச் செய்கையில் இருந்து இவர்தான் அந்தச் சித்தராக இருக்கக்கூடும் என்று நானாக முடிவுக்கு வந்தேன். நான் ஒரு டெபுடி

போலீஸ் சூபிரெண்டெண்டுடன் சென்றேன். நான் செல்லும்போது சுவாமிகளுக்கு அருகில் யாரும் இல்லை, அல்லது இவர்தான் சுவாமிகள் என அறிமுகப்படுத்தவும் யாரும் இல்லை, ஆப்பிள், சாத்துக்குடி இவற்றின் துண்டுகள் கொடுத்தேன். சிலவற்றைத் தூக்கி எறிந்தார். சிலவற்றை உண்டார். அங்கே கிடந்த சாம்பலை விரலில் தடவித் திருநீறு போல இட்டார்.

'நாங்கள் அங்கே இருக்கும்போது ஓர் அன்பர் ஒரு பொட்டலம் திருநீறு கொண்டுவந்தார். சுவாமிகள் மீது கொட்டினார். பின்னர் வாரிக்கொண்டுபோனார். இவர் பெரும்பாலும் தலையைக் குனிந்து கொண்டிருப்பார். லேசாக ஆடிக்கொண்டிருக்கும். அடிக்கடி கல்லைப் பொறுக்கிவைத்துக்கொண்டிருப்பார். அது இவர் கேரக்டர்.'

பூண்டி மகானுடன் இவரது அனுபவங்களைக் கேட்கப்போய் இவர் சந்தித்த ஒவ்வொருவரைப் பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது எனக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது.

இருந்தாலும்—அவரது ஆன்மீக அனுபவங்களை ஒன்றுவிடாமல்—அவர் சந்தித்த சித்தர்கள் அனைவர் பற்றியும் ஒன்றுவிடாமல்—எழுத வேண்டுமென்றால் தனி நூலாகுமே! மூலிகை மணியில் மாதாமாதம் இவரது அனுபவங்களை மட்டுமே எழுதவேண்டிவருமே!

இந்த அச்சம் காரணமாக நானாக கேள்வியைக் கேட்டு அடுத்த சித்தரைப்பற்றித் தெரிந்துகொள்ளாமல் 'கைகளைக் கூப்பினேன்' அவர்களிடம் இருந்து விடை பெறுவதற்காக மட்டுமல்ல; ஒரு பக்குவ ஆன்மாவுடன் தொடர்புகொண்டு சுமார் ஆறு மணி நேரம் புண்ணியவான்களைப் பற்றிய சிந்தனையில் ஈடுபடுமாறு செய்த எல்லாம்வல்ல அன்னைக்குச் செலுத்தும் வணக்கமாகவும் நினைத்துக் கூப்பினேன்!

"சித்தர்களைப் பற்றிய செய்திச் சுரங்கம்
திரு. செல்வராமன் என்பதை அவருடன்
பழகும் எவரும் எளிதில் உணர்வர்."

(தொடரும்)

அனுபவம் உணர்த்தும் உண்மை

நேத்திரப் பூண்டுத் தைலம்

அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு,

என் மகளுக்கு இரவில் சரியான பார்வையில்லாத காரணத்தால் தங்களுடைய ஆலோசனைப் பிரகாரம் நேத்திரப் பூண்டுத் தைலம் 40 தினங்கள் கண்ணுக்குப் போட்டு வந்தது. ஒரு பாட்டிலில் இன்னும் கொஞ்சம் உள்ளது. மருந்து போடும்பொழுது கண்ணிலிருந்து நீர் வந்தது வலது கண் பார்வை முன்னால் இருந்ததைவிட இப்பொழுது சற்று குணம் உள்ளது.

அன்புள்ள,

எஸ். குருசாமி, செயலாளர்,

கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்; கோவில்பட்டி.

ஐயா, வணக்கம் !

நான் உங்களிடம் முன்பு ஒரு பாட்டில் நேத்திரப் பூண்டுத் தைலம் வாங்கி கண்ணுக்கு போட்டு இருந்தேன், ஓரளவு குணம் ஆயிற்று,

இப்படிக்கு,

என். கிருஷ்ணன்,

32, தெற்கு ராஜ வீதி, சென்னிமலை-638051.

ஐயா அவர்களுக்கு,

தங்கள் நேத்திர பூண்டுத் தைலத்தை 15-3-79 முதல் 15-5-79 வரையில் உபயோகித்துள்ளேன். பின் இரண்டு வாரம் உபயோகித்தேன். வலது கண்ணில் சதை குறைச்சலாகி பார்வை கொஞ்சம் தேவலாம்,

அன்புள்ள,

க. முத்தையா பிள்ளை,

திருச்சிற்றம்பலம்,

காய கல்பம்

வணக்கம்

ஐயா,

தங்கள் காய கல்பம் சாப்பிட்டு நல்ல பலன் தெரிந்தது, தங்களின் அறிவுரைப்படி மீண்டும் ஒரு முறை அதே மருந்தை (காய கல்பத்தை) சாப்பிட விழைகிறேன்.

இப்படிக்கு
பிரகாசம்
கோவை – 2,

உயர்திரு. டாக்டர் ஏ, ஆர், கண்ணப்பர் அவர்களுக்கு,

ராசீபுரம் ஏ, சின்னம்மாள் வணக்கத்துடன் எழுதியது, எனக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் குடல் புண்ணும் குன்ம வாயுவும், பெரு ஏப்பமும் இருந்தது. இதற்காகத் தங்களிடம் தபால் மூலம் தெரிவித்து அதன்படி தாங்கள் மருந்து அனுப்பினீர்கள். அதை சாப்பிட்டபின் 12 வருடமாக நன்கு சுகமாக இருந்தேன். தற்போது 4, 5 மாதமாக மீண்டும் பழையமாதிரி குடல் புண்ணும் பெரு ஏப்பமும், குன்ம வாயுவும் ஏற்பட்டுள்ளது. ஆகையால் இது கடிதம் பார்த்து முன் மாதிரி மருந்து அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
ஏ. சின்னம்மாள்,
c/o K. கிருஷ்ணசாமி,
(பழைய இரும்புக்கடை)
270, அண்ணு சாலை, ராசீபுரம் அஞ்சல்
சேலம் மாவட்டம்,

மூலிகை மணி இதழ் தொடர்பான அனைத்து கடிதங்களையும்,

மூலிகை மணி அலுவலகம்
22, திருமலைப்பிள்ளை வீதி எண்-2.
தி. நகர், சென்னை - 17
அஞ்சல் பெட்டி எண் - 1406

எனும் முகவரிக்கு எழுதுமாறு வேண்டுகிறோம்.

இதய ஒலி

மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

ஐயா, நான் தாங்கள் வெளியிடும் மூலிகை மணி பத்திரிகையை ஒவ்வொரு மாதம் தவருமல் வாங்கிப் படிப்பதுண்டு. இதற்கு முன் நான் சில சந்தேகக் கேள்விகளுக்கு தங்களிடம் விளக்கம் கேட்டேன், விளக்கமும் கிடைத்தது. மிகவும் நன்றி.

இப்படிக்கு
N. குமாரசாமி,
மீனுக்ஷிபுரம்,
நாகர்கோவில்.

அன்புள்ள டாக்டர் அவர்களே!

வணக்கம்

தங்களுடைய மூலிகை மணி என்ற பத்திரிகையின் மூலம் நோயாளிகள் கேட்கும் கேள்விகளுக்கு நல்ல பல இயற்கை வைத்திய முறைகளைக் கூறி நோய்களை தீர்த்து வைக்கின்றீர்கள். நன்றி.

இப்படிக்கு
முரளிசந்திரன்,
48, முஸ்லிம் தெரு,
பாண்டி.

திரு. கண்ணப்பர் சித்தவைத்தியர் அவர்களுக்கு

D. மகாதேவன் எழுதிய கடிதம் நலம். நலமறிய அவா. மேலும் தாங்கள் தினமணிக்கதிரில் பச்சிலையைப் பற்றி விளம்பரம் செய்ததால் அவைகளின் பலன் தெளிவாகவும் அனுகூலமாகவும் தெரிந்தது. பயன்பெற்றேன் நன்றி.

இப்படிக்கு
D. மகாதேவன்,
மூங்கப்பட்டு,
அக்ராவரம் P.O.
குடியாத்தம்

அன்பர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்கட்கு,
வணக்கம்,

உங்களின் நம் நாட்டு மூலிகைகள் என்ற புத்தகம் 5 பாகமும் பார்த்தேன், அருமையான எளிமையான, நடை முறைக்கு உகந்த வைத்தியர்களுக்கும் மக்களுக்கும் விளங்கக் கூடிய முறையில் அச்சிட்டுள்ளீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆண்டவன் அருள்புரிவானுகவும் ஆமீன்.

இப்படிக்கு
Dr. I. L. P. M. ISMAIL,
R.S.M.P, (Ceylon]
"Mohamed Kani Vaidya Nilayam"
Saintha Marutdy-3
Ralmunal. Sri Lanka.

உயர்திரு. மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

R. கந்தசாமி எழுதிக்கொண்ட அன்பு மடல் யாதெனில், இப்பவும் நான் தங்கள் வெளியீடுகளில் ஒரு சில பிரதிகளை நான் வாங்கிப் பயின்றேன், அவைகள் பயன்தரும் நூல்களாக எனக்குத் தோன்றின. ஆகவே என்னிடம் "புகழ்பெற்ற மூலிகைகள்" என்ற நூல் உள்ளது. அதில் உள்ள 80 வகை யான மூலிகைகள் பற்றி ஓரளவு நான் பயின்றேன். அவை களில் ஒரு சில மூலிகைகளின் குணுதிசயங்களை நான் சோதனை செய்து வெற்றியும் கண்டுள்ளேன்.

இப்படிக்கு
R. கந்தசாமி,
s/o ராமசாமி கவுண்டர்,
கீழாரிபட்டி, தெவனுங்குறிச்சி (P.O.)
திருச்செங்கோடு (Tk.), சேலம் Dt.

அன்புடையீர்,

மூலிகை மணி 68 முதல் 73 வருட இதழ்கள் சென்னை பிளாட்பாரத்தில் வாங்கினேன். அவ்வளவும் பயனுள்ள வைத்திய குறிப்பாக இருந்தது. எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பைண்ட் செய்துவிட்டேன்.

இப்படிக்கு,
A. LEBBAI SAHIB,
New No. 131, N. S. C. Bose Rd. Madras-1

சென்ற இதழ் தொடர்ச்சி

சித்த மருந்துகளின் செய்முறை

வசந்தா சகஜானந்தன்

சீரக சூரணம்

சுத்தம் செய்த சீரகம் 500 கிராம் எடுத்து ஒரு வாயகன்ற கண்ணடி பாத்திரம் (அ) பீங்கான் பாத்திரலிட்டு சீரகம் முழுவதும் மூழ்கும்படி எலுமிச்சை சாறுவிட்டு ஒருநாள் ஊற வைக்கவேண்டும். மறுநாள் எடுத்து நிழலில் உலர்த்தி எடுக்கவும் இவ்விதமாக கீழ்வரும் சாறுகளில் தனித்தனியாக ஊற வைத்து நிழலில் உலர்த்தவேண்டும்.

1 கருப்பஞ்சாறு
2 முசுமுசுக்கைச் சாறு
3 நெல்லிக்காய்ச் சாறு
4 தூதுவளைச் சாறு
5 வேப்பம்பட்டைச் சாறு
6 தும்பை இலைச் சாறு

ஆக தனித்தனியாக ஊறவைத்து நிழலில் உலர்த்திக் காய்ந்த சீரகத்தை நன்ருக இடித்து பொடி செய்துக்கொண்டு, இதனை எடை போட வேண்டும். அந்த எடையில் $\frac{1}{4}$ பங்கு அளவு சர்க்கரை எடுத்து நன்ருய் பொடி செய்து, இவ்விரண்டையும் நன்ருகக் கலந்து ஒரு கண்ணடி சாடியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 கிராம் முதல் 2 கிராம் வரை. காலை, மாலை தேனில் கலந்து கொள்ளவும்.

தீரும் நோய்கள்:- பித்தம், கிறுகிறுப்பு, வாந்தி, அக்கினி மந்தம், உஷ்ணம், மயக்கம், பசியின்மை முதலியன.

இஞ்சி சூரணம்

1	இஞ்சி	— 40 கிராம்
2	சீரகம்	— 20 கிராம்
3	நாட்டுச்சர்க்கரை	— 60 கிராம்
4	நெய்	— 100 கிரரம்

தோல் நீக்கிய இஞ்சியை மேற்கூறிய அளவு எடுத்து துண்டு துண்டாகநறுக்கி வெய்யிலில் உலர்த்திஎடுக்கவும். இதனை நெய்யில்பொரித்து எடுக்க வேண்டும். சுத்தம் செய்த சீரகத்தை சிறிது நெய்விட்டு பொன் வருவலாக வறுத்து இவ்விரண்டையும் நன்ருய் பொடி செய்துக்கொண்டு இத்துடன் நாட்டு சர்க்கரையையும் அளவுடன் எடுத்து பொடித்து நன்ருய் கலந்து ஒரு கண்ணுடி சாடியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- 30 மி.கி. முதல் 60 மி. கிராம் வரை. தேனில் கலந்து சாப்பிடவும்.

தீரும் நோய்கள்:- வாந்தி, உடம்பில் எரிச்சல், உடல் அனல் போல் வீசுதல், மந்தம், அஜீரணம், பித்தப்பிணிகள் முதலியனதீரும்.

மயிலிறகுச் சூரணம்

1	மயிலிறகு சுட்ட சாம்பல்	— 45 கிராம்
2	சீரகம்	— 100 கிராம்
3	திப்பிலி	— 50 கிராம்

சீரகம், திப்பிலி இவ்விரண்டையும் நன்ருய் சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்தி இடித்து தூள் செய்துக்கொள்ளவும். மயிலிறகு சுட்ட சாம்பலை மேற்கூறிய அளவுடன் எடுத்து இவ்விரண்டையும் கலந்து கண்ணுடி சாடியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 2 கிராம்வரை தேனில் கலந்துக்கொள்ளவும்.

தீரும் நோய்:- விக்கல்.

பஞ்சதீபாக்கினி சூரணம்

1	சுக்கு	— 100 கிராம்
2	மிளகு	— 100 கிராம்
3	திப்பிலி	— 100 கிராம்
4	சீரகம்	— 100 கிராம்
5	ஏலக்காய்	— 100 கிராம்
6	சர்க்கரை	— 500 கிராம்

மருந்துகள் யாவற்றையும் சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்தி இடித்து நன்ருக பொடி செய்து சர்க்கரையுடன் கலந்து கண்ணுடி சாடியில் பாத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 கிராம் முதல் 2 கிராம் வரை. வெந்நீர், தேன், பால் ஆகியவைகளில் கலந்துக்கொள்ளலாம்.

இந்த சூரணம் செந்தூரம், பற்பம் முதலியவைகளுக்கு துணை மருந்தாக சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

நிலவாகைச் சூரணம்

1	நிலவாகை	— 100 கிராம்
2	சுக்கு	— ,, ,,
3	மிளகு	— ,, ,,
4	வாய்விளங்கம்	— ,, ,,
5	ஓமம்	— ,, ,,
6	சர்க்கரை	— 500 ,,

மருந்துகளை சுத்தம் செய்து வெய்யிலில் உலர்த்தி பொடிசெய்து சர்க்கரையில் கலந்து கண்ணாடி சாடியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 2 கிராம் வரை. வெந்நீர், தேன் இவைகளில்.

தீரும் நோய்கள்:- வாய்வு, பித்தம், வயிற்றுப் பொருமல் (வயிற்றில் கடமுடா சத்தம்), விக்கல், வாந்தி, உடம்பு எரிதல் முதலியன.

கற்பகமிளகு பொடி

மிளகு — 500 கிராம்
உத்தாமணிச்சாறு தேவையான அளவு

வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் கெட்டியான மிளகு 500 கிராம் எடுத்து அதில் உத்தாமணிச் சாற்றை மிளகு மூழ்கும் வரையில் விட்டு 24 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு அதை அப்படியே வெய்லில் நன்ருக காயவைக்க வேண்டும். பின் அதை உரலிலிட்டு இடித்து தூள் செய்து ஒரு கண்ணாடி சாடியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு முறை:- குழந்தைகளுக்கு 10 மி. கிராம் முதல் 30 மி. கி. வரை. தேன், பால், வெந்நீர் அனுபானத்துடன் கொடுக்கவேண்டும். 3 மாத குழந்தைகள் முதல் ஒன்றரை வயதுவரை தினம் 1 வேளை குழந்தைகளுக்கு கொடுத்துவர அஜீரணம், பால், தயிரைப் போன்று வாந்தி

எடுப்பது, பேதி, மந்தம், மாந்த இழுப்பு, ஜுரம், அள்ளு மந்தம் (வயிற்றின் மேல்பக்கம் பள்ளம்விழும் மாந்த இழுப்பு), உப்பு மாந்த இழுப்பு இவை வராமல் தடுக்கலாம்.

பெரியோர்களுக்கு அளவு:- 30 முதல் 100 மி. கிராம் வரை கொடுக்கி அஜீரணம் பேதி, வயிற்றுக் கோளாறுகள், வாயுத் தொந்தரவு போன்றவை நீங்கும்.

கண்ணப்பரின் அனுபவ முறையல்லவா இது!

மூலிகை மன்னர் கண்ணப்பர் அறிமுகப்படுத்திய அனுபவ மருத்துவ முறைகளில் கற்பக மிளகுச் சூரணமும்(பொடி)ஒன்ருகும். மூலிகை மணி வாசகர்களில் பலரின் வீடுகளில் 'கற்பக மிளகுச் சூரணம்' நிச்சயமாக இருக்கும். இச்சூரணத்தைப் பயன்படுத்திப் பயன்பெற்றவர்களின் அனுபவ உண்மைகள் பல 'இதய ஒலி' பகுதியில் உளது. இவைகள் 'கற்பக மிளகுச் சூரணத்தின்' அரிய பயனுக்கு சான்ருக விளங்கும்.

(தொடரும்)

முக்கிய கவனிப்பு

இந்த இதழுடன் ஆண்டுதோறும் ஆசிரியர் கண்ணப்பர் அவர்களால், திருத்தணிகையில் நடத்தப்பெற்று வரும், தணிகை வேலன் திருமுழுக்கு உற்சவத்தின் திருநீறு—குங்குமம் இணைத்து அனுப்பியுள்ளோம். உலக மக்களின் உடற்பிணியும் நீங்கி, நல்வாழ்வு எய்தவேண்டும் என ஆசிரியரால் பிரார்த்திக்கப்பட்டு, திருமுருகப் பெருமானுக்கு திருமுழுக்கு செய்விக்கப்பெற்ற இதனை அன்பர்கள் நெற்றியில் அணிந்து நல்வாழ்வுபெற வேண்டுகிருேம்.

—மேலாளர்.

மூலிகைமணி இதழ் தொடர்பான அனைத்து கடிதங்களையும்,

மூலிகை மணி அலுவலகம்
22, திருமலைப்பிள்ளை வீதி எண்-2.
தி. நகர், சென்னை - 17
அஞ்சல் பெட்டி எண் - 1406

பூண்டி மகான் புனித நினைவுகள்

1961-இலிருந்து

மூலம்: பாண்டு சுவாமிகள்
பதிப்பு: க. ந. நன்றுடையான்

2

கலசபாக்கத்தில் கைகழுவலும் பூண்டியில் புசித்தலும்

சுவாமிகள் கலசபாக்கத்தில் சில காலம் தங்கியிருந்தார்கள். அப்போது சற்றுப் பசையாக இருந்த ஒரு குடும்பத்தினர் சுவாமிகளை வலிய ஆதரித்து வந்தனர். வினைவயத்தால் அவர்கட்கு வாணிபத்தில் வளமை குன்றியது. அப்போது அதுபற்றி அவர்கள் சுவாமிகளிடம் முறையிட்டனர். தவவலிமை மிக்க சுவாமிகள் கண்ணைக் கவரும் ஒரு சித்தை—மின்னைப் போல் பொன்னைக் காட்டும் ஒரு சித்தை—காட்டியும் காட்டாததுமாய் மறைத்து விட்டனராம். இதனால் கடுங்கோபம் கொண்ட அந்தக் குடும்பத் தலைவர் கொடும்பத் தலைவராகி சுவாமிகள் உடலுக்கு ஊறுசெய்தனராம். சுவாமிகளோ அவர்கள் தந்த 'ஊண் உண்டு வளர்ந்த ஊன்தானே!' என்று எண்ணி சுடச்சுட ஒளிரும் பொன்போல் துன்பம் பொறுத்துக்கொண்டனராம். துன்பம் செய்தாரோ துன்பத்தின் எல்லையைத் துண்ணினராம்.

ஒருமுறை சுவாமிகளே சொல்லியது போல சீவன் முக்தருக்கும் வினை உண்டல்லவா? சுவாமிகள் கலசபாக்கத்தைக் கைகழுவி பூண்டியில் புகுந்தார்கள். ஆம். கலசபாக்கத்தில் கைகழுவி பூண்டியில் புகுந்தார்கள்! —இல்லை!—பூசித்தார்கள்: ஆம். அது பூண்டி புரிந்த புண்ணியம்! இங்கேயும் முதலில் சுவாமிகள் ஒரே இடத்தில் தங்கவில்லை. பூண்டி இடுகாடு, பூண்டி அம்மன் கோவில் முதலிய இடங்களிலும் ஆற்று ஓரங்களிலும் அமர்ந்து சுவாமிகள் கடுந்தவம் புரிவார்கள். பிரயாம்பட்டுப் பிள்ளையார்கோவில் பூந்தோட்டத்தில் ஒரு சிவலிங்கம் உள்ளது. அவ்விடத்தும் சுவாமிகள் அமர்ந்து அருந்தவம் இயற்றுவார்கள். இந்நேரங்களில் அவர் எவரையும் குடிக்கத் தண்ணீரும் கேட்டதில்லை,

இவ்வாறு சுவாமிகள் எவரிடமும் எதையும் எதிர்பாராது கடுந்தவம் புரிந்த காலங்களில்தான் கலசபாக்கம் ஓட்டல் கடை கோபால் நயினுர், கடலாடி சிவானந்தம் முதலியார், காஞ்சி நாராயணசாமி முதலியார் ஆகியோர் சுவாமிகளைத் தேடி ஆகாரம் கொண்டுவந்து கொடுப்பார்கள். இவர்கள் பக்தியைச் சோதிப்பதுபோல் இந்நேரங்களில் சுவாமிகள் இவர்கள் கண்கட்கு அகப்படுவதில்லை. அன்பர்கள் மனம் சலித்துப் போவார்கள். கடலாடி சிவானந்த முதலியார் சுவாமிகளுக்கு ஆடைகள் கொண்டுவந்து உடுத்துவதும் வழக்கம். சுவாமிகள் பழைய ஆடைகளைக் களையாமல் மேலும் மேலும் புது ஆடைகளைப் போட்டுக்கொள்வார்கள். ஆம். சுவாமிகள் கடுந்தவத்தில் மூழ்கி முத்துக் குளித்த காலம் அது. அதனுல் அவர்கள் நாள் கணக்காக ஒரே இடத்தில் அமர்ந்து நிஷ்டை செய்வார்கள். ஒரொரு சமயம் கர்ப்பம் கலங்க சிம்ம கர்ச்சனை செய்வார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் ஒருநாள் சுவாமிகள் சாலைஓரம் மரத்தடியில் அமர்ந்து சிறுசிறு கற்களைப் பொறுக்கி வாயில் போட்டுக் கொண்டிருந்தார்கள். யான் கிட்ட அணுகியதும் அவ்வாறு செய்வதை நிறுத்திவிட்டார்கள். அப்போது சுவாமிகளிடம் என் குறையை முறையிட்டேன். 'சுவாமி, ஒரு சீவன் உலகில் தோன்றினுல் இகத்திற்காவது பயன்படவேண்டும்; அல்லது பரத்திற்காவது பயன்படல்வேண்டும்' என்றேன். சுவாமிகள் 'படைப்பை அழிக்க நமக்கு உரிமை இல்லை' என்கிருர்கள். ஆனுல் என் மனக்குமுறலை உணர்ந்த சுவாமிகள் பட்டாம்பாக்கம் சுவாமி மூலம் சடகோப யோகத்தைக் கற்பித்து வைத்தார்கள் என்று கருதுகிறேன். பட்டாம்பாக்கம் சுவாமிகள் அவருடைய குருவின் அறிவுரைப்படி கடலூரிலிருந்து பூண்டிக்கு சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள்.

வடகரை சிவானந்த பரமஹம்சரிடம் தீட்சை பெற்றிருந்த பட்டாம்பாக்கம் சுவாமிகளின் அறிவுரைகளும் தூண்டுதல்களும் துணைபுரியவே முதலில் தையல்கடை வைத்திருந்த சுப்பிரமணியமும் (இப்போது குருக்கள் சுப்பிரமணிய சுவாமி) யானும் சுவாமிகள் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டோம். அதில் யான் யோக சாதனையில் அதிக நாட்டம் கொண்டேன். சுப்பிரமணியமோ சுவாமிகள் கைங்கரியத்தில் அதிகம் ஈடுபட்டார். இச்சமயத்தில் நாயுடுமங்கலம் ஸ்ரீ ஜெகதீசசுவாமிகள் மாதம் தவருமல் கடலை எண்ணெய் டின் ஒன்று கொடுத்து விளக்கேற்ற ஏற்பாடு செய்தார். நாயுடு மங்கலம் ஜெகதீச சுவாமிகள் பௌர்ணமியில் பஜனை கொண்டு வருவதும் வழக்கம். என் மனக்குமுறலை சுவாமிகளிடம் அடிக்கடி உணர்த்தி வருவேன். பிறப்பிலேயே பிறர் அருவருக்கும் தோற்றம் உண்டாகும்படி பிறந்துவிட்ட எனக்கு என்ன

தான் விடிவு என்று சுவ்ாமிகள் திருமுன் மனம் குமுறுவேன். அதனுல் சுவாமிகளே சூட்சமாக எனக்கு அருள் புரிந்தார்கள், என்றும் நம்புவேன். ஒருமுறை சுவாமிகள் மடியில் தலைவைத்துப் படுத்த நிலையில் 'சுவாமி, நாளைக்கு கிராப் வெட்டிக்கொள்ளப்போகிறேன்' என்றேன். 'அப்படியா?' என்று சுவாமிகள் புன்முறுவல் பூத்தார்கள். மறுநாள் என் தலையில் சடை விழுந்து விட்டது. இன்னெரு முறை என் சொத்துகளை (நிலபுலங்களை) இழப்புக்கு விற்க நேர்ந்தது. சுவ்ாமிகள், 'விற்றுவிடு; அதெல்லாம் நமக்கு வேண்டாம்' என்று அருளி விட்டார்கள். மற்ருெரு முறையோ பூண்டித் திண்ணை ஒன்றில் அமர வைத்துப் போவோர், வருவோர் எத்தகைய விலங்கினர் என உணரவைத்து 'நாய்', 'கழுதை' என்று அடையாளம் கண்டு கொண்டு அறிவிக்க வைத்தார்கள். இதையெல்லாம் விட ஒரு பெரிய அதிசயம்; ஒருநாள் கனவு; சித்தர்கள் நிறைந்த பொதிகை மலைக்கு அழைத்துச்சென்ருர்கள். அங்குள்ளவர்கள் — சித்தர்கள் — 'இவரை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்?' என்கிருர்கள். 'ஏதோ அழைத்து வந்து விட்டேன்!' என்று நம் சுவாமிகள் பயபக்தியுடன் பதில் சொல்கிருர்கள். அப்பொழுது ஒருவர் என் கபாலத்தைத் திறந்து ஏதோ மாற்றி எழுதிவிட்டு மறுபடியும் கபாலத்தை மூடுவதாக உணர்ந்தேன். இதுபற்றிச் சுவாமியிடம் மறுநாள் கேட்டபோது 'ஆமாம்; எல்லாம் சரிசெய்தாகிவிட்டது' என்ருர்கள். என்னே அவர்கள் கருணை! (முற்பிறவியில் சுவாமிகள் மேலே பாம்பு முதலியவற்றைப் போட்டுக் குறும்பு செய்த தீவினையால் இப்பிறவியில் எனக்கு இத்தண்டனை என நாடி (சோசியம்) நவிலும்).

குறிப்பு:—

மேலே குறிப்பிட்ட பொதிகை நிகழ்ச்சியைச் சுவாமிகள் பற்றிய புத்தகத்தில் எழுதலாமா என்று சுவாமிகளிடம் சில மாதங்கட்கு முன் (ஓராண்டுக்குள்) பாண்டு சுவாமிகள் திரு. வைத்தியநாதனுடன் இசைவு வேண்டியபோது நான் சற்று எட்ட இருந்தேன். சுவாமிகள் கூர்ந்து கேட்டுவிட்டு முதலில், 'பொறுத்துப் பார்க்கலாம்' என்ருர்கள். பாண்டு சுவாமிகள் 'புத்தகம் விரைவில் வெளிவர இருக்கிறது' என்று வற்புறுத்தியதும் 'இப்பொழுது வேண்டாம்' என்று சொல்லி விட்டார்கள். தம்மைப் பற்றிய அதிசயச் செய்திகள் தம் ஜீவியதசையில் வெளிவருவதை சுவாமிகள் ஒப்பவில்லை போலும்! ஆம். அதனுல் அவருக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படும். இராமலிங்க சுவாமிகளை இறுதி நாளில் 'பிய்த்துப் பிடுங்கிய' நிலையல்லவோ ஏற்படும்? மௌனமாக இருக்கும்போதே எவ்வளவோ ஏச்சுகளும் பேச்சுகளும்!

(தொடரும்)

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:

புதுவை அரவிந்த அன்னையின் புது ஒளி

— பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி —

* பரம்பொருளின் ஆற்றல் எல்லையற்றது—நம் நம்பிக்கையே சிறிது.
* கைநெகிழ் விடாதே; கெட்டியாய்ப் பிடி. எல்லாம் கைவிட்டுப் போனது என எண்ணும்போதே எல்லாம் கைகூடும்.
* தடை ஒன்றைப் பற்றியே ஒருமைக் கருத்து உருதே; அது அதை வலுப்படுத்தவே செய்கிறது.
* உன் இடர்ப்பாடுகள் மீது புன்முறுவல் செயல்படுகிறது—மேகங்கள் மீது கதிரவன் போல அது அவற்றைக் கலைக்கிறது.
* எவ்வித இடர்பாடாயினும் நாம் உண்மையாகவே செயல்பாடின்றி இருந்தால் தீர்வு தானுக வரும்.
* செயல்கள் இருக்க வேண்டியபடி இருக்காவிட்டாலும் கவலை அவற்றைக் களைவதில்லை. அமைதியான நம்பிக்கையே வளமையின் வைப்பு.
* வாழ்வின் ஒவ்வொரு மணித்துணியிலும் தெய்வ அருளுக்கும் உன் தனி விருப்பு நிறைவுக்குமான தேர்வில் நீ வைக்கப்படுகிருய்.
* அகத்தே வாழ்; புறச்சூழல்களால் உலுக்குருதே.
* உண்மையான எல்லா வேண்டுதல்களும் ஏற்கப்படுகின்றன. ஒவ்வோர் அழைப்பு மறுமொருபெறுகிறது.
* எப்பொழுதும் நாம் எண்ணும் பொருள்களாலேயே நாம் சூழ்ந்து உள்ளோம்.
* ஓர் ஆசையை நிறைவு செய்வதினும் வெல்லுவதே அதிக இன்பம் தருகிறது.
* உயருரு மாற்றத்திற்கு ஒவ்வொரு துன்பமும் உதவட்டும்.
* எல்லா அச்சம், எல்லா முரண்பாடுகள், எல்லா சண்டைகள் எல்லாவற்றையும் விடுக; உங்கள் கண்களையும் இதயங்களையும் திறக்க: மனங்கடந்த மாபெரும் ஆற்றல் ஆங்காங்கே உள்ளது.
* இறைவன் உனக்கு ஓர் இடர்ப்பாட்டை எண்ணிவானேல் எதிர்க்காதே; அதை ஆசியாய் அமைத்துக்கொள்; அவ்வாறே ஆகும்.
* தோற்றங்கள் கரியதாயினும் தெய்வ அருள் எப்போதும் நம்முடன் உள்ளது; அது நம்மைவிட்டு எப்போதும் அகல்வதில்லை.

என்ன செய்யலாம்?

**சீழுடன் கூடிய ரத்தக் காயங்கள் ஆற
என்ன செய்யலாம்?**

பப்பாளி பழத்தை வெட்டி அதனை அப்படியே சீழுடன் கூடிய ரணத்தின்மீது வைத்துப் பூசிவர, சீழ் அகலும். ரணம் ஆறும். மேனாடுகளில் ரணம் ஆற்ற பப்பாளி தற்போது பயனாகிறது.

**உடம்பில் நரை விரைவில் வராமல் இருக்க
என்ன செய்யலாம்?**

தினம் எலுமிச்சம்பழத்தை எவ்வகையிலாவது உண்டு வாருங்கள் அதுபோதும்.

**ஆண்மையோடு எப்போதும் விளங்க
என்ன செய்யலாம்?**

தாமரை மலரினுள் உள்ள மகரந்தப்பொடியுடன் சிறிது தேனும், அமுக்கினாங்கிழங்குப் பொடியும் கலந்து 3 மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம்.

நீண்ட காலம் அழகுடன் விளங்க என்ன செய்யலாம்?

இஞ்சியைத் தோல் நீக்கி பதப்படுத்தி, தேனில் ஊற வைத்து காலைதோறும் சாப்பிடவும்.

அரிசி மாவை பசுவின் நெய்யுடன் கலந்து சிறிதளவு புசித்து வரவும் அழகு பெருகும்; ஆயுள் நீளும்.

**வயதானால் முகத்தில் படரும் கருமையைப் போக்க
என்ன செய்யலாம்?**

நன்னாரியின் வேரினையும், ஆலம்பட்டையும், ஆவாரம் பூவையும் கஷாயம் செய்து, வாரம் இருமுறை சாப்பிட்டுவர, கருமை குறையும். 'நன்னாரி விரும்ப பொன்னாகும் மேனி'

பித்தமும், சளியும் சேராமல் தடுக்க என்னசெய்யலாம்?

துளசி தெரியுமா? அதில் பதினைந்து இலைகளை எடுத்து வாயிலிட்டு மென்று தின்னுங்கள். மாதம் 15 நாட்கள் சாப்பிட்டாலே போதுமானது. பித்தமும், சளியும் தொடர்பான நோய்கள் வராது.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி :

சித்தர்கள் அருளிய சிடுகா மருந்து

க. வே.

உடம்புச் சூட்டிற்குக் குடிநீர்

தாமரைப்பூ, அதிமதுரம்
மனத்தக்காளி வற்றல்
வெள்ளரி விதை

இவற்றை சமஅளவு எடுத்து நிழலிலுலர்த்தி இடித்து 2 குவளை நீர்விட்டுக் காய்ச்சி 1 குவளையாக வடிகட்டிப் பருகிவர, உட்சூடு, தேக அணல் தணியும்.

சளிக்காய்ச்சல் தீர

ஓமம்
சிற்றரத்தை
திப்பிலி

இவை வகைக்கு 35 கிராம்.

ஆடாதோடை
கண்டங்கத்திரி
நிலவேம்பு

இவை வகைக்கு 1 பிடி

எடுத்து இடித்து, அரை லிட்டர் நீர்விட்டுக் காய்ச்சி கால் லிட்டராக வடிகட்டி, காலை, மாலை இருவேளை வீதம் மூன்று நாட்கள் பருகிவர, சளியுடன் கூடிய கபக்காய்ச்சல் விலகும்.

குழந்தைகளின் வளர்ச்சிக்கு

தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு
வெள்ளாட்டுப்பால்
தேங்காய்ப்பால்

இவற்றை வகைக்கு அரை லிட்டர் எடுத்துக் கலந்து அத்துடன் 100 கிராம் நெய்விட்டு கலக்கி, 150 கிராம் கற்கண்டு கலந்து காய்ச்சவும். பாகுபதம் வரும்போது இறக்கி வைத்து காலையில் 2 டீஸ்பூன் அளவு உள்ளுக்குக் கொடுத்து வர, வளரும் குழந்தைகள் கொழுத்து வளரும். (தொடரும்)

சத்திசிவம் அமைப்பும் நெற்றிக்கண்ணின் ரகசியமும்-II

— நி. மெய்யப்ப சுவாமி —

முக்கிய கவனிப்பு : இத் தொடரில் இதற்கு முன்பு வெளியிட்ட கட்டுரைக்கு முன் ஒரு கட்டுரை தவறிவிட்டது. அக்கட்டுரை அடுத்த இதழில் வெளியிடப்பெறும். தொடர்புப்படுத்தி வாசிக்கவும்.

சத்திசிவம் என்பதின் பொருள் தத்துவ அடிப்படையிலும், தெய்வாம்ஸ ரூப அடிப்படையிலும், புராண சாஸ்த்திரங்களிலும்,பற்பல ரூபவடிவங்களாக வர்ணிக்கப்பட்டுப் போற்றி துதிசெய்து வணங்கிக் கொண்டாடிவருகிறோம். சத்திசிவம் என்ற பெயருடன் சித்தர்களான நமது மூதாதையர்கள், மானிட சரீரத்தின் உள் தத்துவப்பொருளான வஸ்த்துவினமைப்பையும், அதன் வீரியமிக்க செயலான நீண்டகாலம் மனிதன் வாழமுடியும் என்ற முடிவான அநுபவரீதியில் தீர்க்கமானத் திடமுடிவோடு, மனிதனே தெய்வம், தெய்வமே மனிதன் என்னும் அடிப்படையையமைத்து நமக்கு சரீரத்தின் உள் கூறுவஸ்த்துக்களையே தெய்வங்களாக வணங்கிக்கொண்டாட, உவமானக் கருவாகப் பலகோடி பாடல்கள்பாடி விளக்கங்கள் தந்துள்ளார்கள். அவ்விளக்கத்தின் மூல நூல்களே சித்தர்களின் நூல்களாகும். சித்தர்களின் நூல்களில் நீர், நெருப்பு, காற்று எனும் மூன்றுக்கும் முக்கியத்துவம்தந்து, இந்த மூன்றிலிருந்து ஆகாயம், வாயு, தீ, அப்பு, பிருதிவி எனும் ஐந்தையும் பிரித்து இந்த ஐந்திலுமிருந்து (முன் மூன்றுடன் இவ்வைந்துஆக 8) பஞ்சபூத சரீரமான கருபிண்டமமைய, பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று விளக்கியுள்ளார்கள். (முன்) மூன்று என்பது நாதம் 2. விந்து 1 மூன்று. (1 பரம், வட்டம் 2, உகாரம் சத்திநாதம் 3 அகாரம் விந்து சிவம்) இந்த மூன்றினில் அகாரமாகிய விந்து சிவத்திலிருந்து பிறந்த நாதமென்ற மகாரம் முச்சுழியாகும். இம்மகாரமெனும் நாதத்தில் பிறந் ததே, விந்துவினம்ஸமான பிரணவம்(ஓ) இவ்வமைப்பே மூன்றினிலைந்து என்பது. இவ்வைந்தில், விந்தாகிய பிரணவத்தில் பிறந்ததே மதியாகிய சந்திரன். வகாரமும் ரவியாகிய சூரியன் சிகாரம், இந்திரவீமதி (வ–சி) ஒன்றுகூட சுழிமுனை எனும் அக்கினி (குரு) யகாரம். முன்னைந்துடன் ரவி, மதி, அக்கினி மூன்றுசேர எட்டு என்பது. மூன்றினிலாறு என்பது, அகாரம், மகாரம், பிரநவம்,ரவிமதி, மதி, அக்கினி, ஆகஆறு, இந்த ரவி, மதி, அக்கினியில் பிறந்ததே. பஞ்சபூதக் கருவாகிய மானிடச் சரீரப் பிண்டம், ந. ம. சி. வ. ய. எனும் அக்ஷர குறியீடாகும். இதில் மதி, ரவி,

கூடிய அக்ஷரகுறியீடு, சி. வ. ய. ந. ம. எனும் தெய்வாம்ஸமான கணபதி கலைகளமைப்பாகும்......

சிவவாக்கியர் 1000ல் 309வது பாடலில்,

ஆதியந்த மூலவிந்து நாதமைந்து பூதமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமைந் தெழுத்துமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமேவி நின்றதும்
ஆதியந்த மூலவிந்து நாதமேசிவாயமே...... என்கிறர்

நாம் சித்த நூல்களை ஆராயும்போது நீர், காற்று, நெருப்பு, (நாதம், விந்து) கூறுகளுடன், பஞ்சபூதக் கலைகளான நீர், நெருப்பு, காற்று, (பஞ்சஇந்திரியம்) வஸ்த்துகளும் ஒன்றென எண்ணிச் செயல்படக் கூடாது என்பதினலேயே தெய்வாம்ஸங்களான பெயராகவுங் கூறியதில் ஏற்றம், இறக்கமாக தாய், தந்தை, குரு, தமையன், தம்பி, தமக்கை, தங்கை, மனைவி, மாமன் எனும் பாகுபாடுடன் விளக்கம் தந்துள்ளார்கள். எனவே இவற்றின்வழி செயல்படுமுன்பு சத்தி, சிவம், அல்லது தலை, கால் எனும் நாதம், விந்து இவைகளினிலையை எவ்வாறு தெய்வ ரூபங்களாக அமைத்து விளக்கந்தந்துள்ளார்களென்பதைக் காண்போம். திருமூலர் திருமந்திரத்தில், ''மூன்றினில் ஐந்தாகி'' என்கிறர். எனவே மூன்று என்ன? என்பது பார்ப்போம். மூன்று என்பது நீர், நெருப்பு, காற்று இவைகளே நாதம் விந்து என்றும், தலை, கால், சத்தி, சிவம், உடல், உயிர், அப்பு, உப்பு எனக்கூறப்பட்டுள்ளது. நீரே சத்தியாகியநாதம் தலை, அப்பு. தீயே சிவமாகிய விந்து கால் எனும் உப்பு எனப்படுவது. அப்பு, உப்பு, கூடினல் முப்பு முடிந்தது என்று சித்த நூல்கள் கூறுகின்றன. அப்படியாயின் அப்பு எனும் நீரும், உப்புயெனும் தீயும்ஒன்றுசேர வாயுவு எனும் முப்புவாகிறது. முப்புவாயுவாக இல்லாது வீரியமிக்க பிராணவாயு வஸ்த்து அணுக்களான அமிர்த சஞ்சீவியாக உள்ளது. எனவே இவ்வஸத்துவினிலைகளை சிவசத்தி ரூபமாக வரைபடங்களும், சிலைகளையுங் கூர்ந்துபார்த்து ஆராய்ந்தோமானல் உண்மைப் புலனுகும். சிவனெனுஞ் சிலாரூபத்திலுஞ்சரி, வரைபடங்களிலுஞ்சரி, சிவன் சிரஸின்முடி(மயிர்)யிலுள்ள கெங்கையெனும் அப்புவானச் சத்தியின் தலையைக் காண்கிறேம். தலையை மட்டுந்தான் காணமுடிகிறது. சிவன் சிரஸின் முடியி (மயிர்)னுள் உள்ளே தலைமட்டுந்தான் உள்ளதா? உடலுங் காலுமெங்கே? எங்கே? எவ்வாறு எந்த உவமான அடிப்படையிலிருக்கிறதென்பதை தெளிவுற உணர்ந்தால்தான் சத்தி சிவமெனுந் தெய்வ ரகஸியமைப்பான முப்பு என்பதின் விளக்கங் கிடைக்கும். தீயெனுஞ் சிவனுக்கு இரண்டு பெண்கள் (மனைவிகள்) ஒன்று கெங்கையெனுஞ் சத்திநீர் அப்பு. மற்றெரு பெண்சத்தி எங்கே? என்பதே. சிவனுக்கு இரண்டு பிரிவுகளுண்டு. ஒன்று நாதவிந்தென்ற (சத்திசிவம்) கலைகள் பூரணமான அமைப்பிலும், மற்றென்று விந்து

நாதம் (சிவம்சத்தி) எனும் கலைகள் குறைந்த அமைப்பிலுமமைந்துள் ளது. இந்தப் பாகுபாடுணராது ஆராய்ந்துச் செயல்படுவது பொருத்த மற்றதாகும். சத்தி, நாதம், அப்பு எனக்கூறப்படும் நீரே தலை. இதற்கு தான் வேகத்தலை எனப்பெயர் அப்புவாகிய சத்தியின் தலைக்கு வாயுவா கிய முடியே(மயிர்) உடல். வாயுவாகிய முடிஉடலுக்குதீயே (சிவம்)கால் கள் ஆனதால், சிவமெனும் தீ கால்களே (சாகாக்கால்)ஆண். போகாப் புனல் எனும் வாயுவு முடி (மயிர்)யான உடலும் பெண். தீ சிவம், ஆண். வாயுவு, பெண். அப்பு, நீரும் பெண் ஆனதால் தலையும், உட லும் பெண். கால் ஆண். பெண்(சத்தி) இரண்டு, ஆண்சிவம் ஒன்று. சத்தியின் கால்களே சிவமானதால், சத்தியின்வழி (நகாரக்கண்) குண் டலிசத்தியான யோனிகண்ணே, ஞானக்கண் என்றும், சிவன்நெற் றிக்கண்ணென்றுங் கூறப்பட்டுள் ளது. இதன் கருத்தை முன் னிட்டே திருமூலர் ''பாங்கார் நகாரம் பயினெற்றியுற்றிடும்'' என்கிருர். ஆகவே ஞானிகளான சித்தர்கள், குண்டலிசத்தியெனும் யோனிக்கண் உள்ளுருப்பை ஞானக்கண் என்றனர். இதன் வழி கிடைக்கும் சுரோணித மெனும் பூநீர் வஸ்த்துவை ஞான கண்ணின் நீர் என்றும்,கண்ணீர், விண்ணீர் என்றும் சித்தர்கள் நூல்களில் பாடல்களாக அமை யப்பெற்றது. பஞ்சபூத நம் மானிட சரீரத்தில் பெண்ணினப் பருவநிலை, கலைகள் நிலை, இவை களமையும்தன்மைக்கேற்ப வீரிய மிக்க வஸ்த்துவின் தெய்வாம்ஸ பெயர்களாக அமைத்துத் தரப் பட்டுள்ளது.



எனவே, தலை, உடல், கால், விளக்க விபரத்துடன் வரைபடமும், தந்துள்ளேன். தவிர கண்ணீர், விண்ணீர், நெற்றிக்கண்ணீர், ஞானக்கண்ணீர், முதுகண்ணீர், சுரோணிதநீர் என்பன யாவும், பெண் ணினப் பூநீர்வஸ்த்து என்பதே உண்மை. இதற்குச் சான்றுகள் சகல சித்துநூல்களிலும் காணலாம். தவிர இக்கருத்திற்கொப்ப எனது ஆசான்

வரைந்துக் காட்டிய வரைபடவிளக்கமும், இக்கட்டுரையில் தந்துள்ளேன்.........

அகஸ்த்தியர் தெண்டகபக்ஷணி 134-ல் 80-வதுபாடல், 88-வது பாடல்........

80. மங்கைமுது கண்ணில் தங்கையொடு யிசைய
திங்கள் கதிர்சேரு மெங்கள் குலமாமே

88. மாதமுதக் கண்ணீர் சோதிநிற மாகும்
சூதமதில் வாரு வாத முறையாமே........ என்கிருர்.

.....................தவிர...

பெண்ணடி ஆதிமூலம் பேசுவார்
பெரியோர், ஞானக்
கண்ணடி யிருந்த நீரைக்
கலந்தறியாத வாதி
விண்ணடி யிட்ட போது
வேறெரு ஜெயநீருண்டோ .. .... என்கிருர்.

இதில் சத்தியிரண்டு (வாயுவும் நீரும் பெண்) சிவம் ஒன்று (தீ-ஆண்) என்பதற்குச் சான்று. "டமாரானந்தர் சிவநூல் சூத்திரம் 17-ல் 9-வது பாடலில்....... தானென்ற வன்னிக்கு ஆண்என்றேபேர்
தண்ணீரும் வாய்வுக்குப் பெண்என்றேபேர்.... என்கிருர்.

இன்னும் அகஸ்த்தியர் வழலைசூத்திரம் 12-ல் 9-வது பாடலில்........

9. "போச்சப்பா ஆணுக்கு ஒன்றே தீக்ஷை
பேசாதே பெண்தனக்கு இரண்டே தீக்ஷை.

10. இசையவே வன்னிக்குக் கலைதா னென்று
இரட்டிப்பு வேணுமடாத் தண்ணீருக்கு........ என்றும்.....

ரோமரிஷி கருமானச் சுருக்கம் 51-ல் 37-வது பாடலில்........

ஆச்சப்பா ஆண்ஒன்று பெண்தானிரண்டு
அறியாத மாண்பருக்கு வெவ்வேராகும்......... என்கிருர்.

அகஸ்த்தியர் ஞானம் 16-ல் 12-வது பாடலில்........

உடலுயிரும் பூரணமும் மூன்றுமொன்று
உலகத்தில் சிறிதுஜனம் வெவ்வேறென்பார்....என்கிருர்.

உடலெனும் வாயுவுகலைகளே பூரணம் எனும் உயிர் (பிராண வாயுவு)வஸ்த்துவே "முப்பு" தவிர, விந்து, அகாரம், எட்டு, சிவம்,கால் எனப்படும், அக்கினியே நெருப்பாறு. வாயு, உடல், சிவன் ஜடாபாரம், சத்தி, மால் எனப்படும் பிராணவாயுவே மயிர்பாலம். நாதம், சத்தி, உகாரம், இரண்டு தலை எனப்படும் நீரே, சுத்த கெங்கை..... (தொடரும்)

மலரால் மலரும் உடல்நலம்

- டி. எல். சுப்பிரமணியன் -

''மலர்களின் மணம், பல நோய்களை வரவொட்டாமல் தடுக்கக் கூடியது என்று அண்மையில், ரஷ்ய நாட்டு அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.''

ஆனல் பல நூற்றுண்டுகட்கு முன்னரே, மலர்களை நம் நாட்டு மருத்துவர்கள், நோய் நீக்கும் மருந்தாகவும், வராது தடுக்கும் சாதனமாகவும், பயன்படுத்தினர் என்பதை 'பதார்த்தகுண சிந்தாமணி' போன்ற நூல்களின் வழி அறியலாம்.

மருந்தாகப் பயன்படும் சில **மலர்களைப்** பற்றிய குறிப்புகளைக் கீழே காணலாம்.

மணமும் குணமும்

ரோஜா:-

ரோஜா மலரின் மணத்தினுல் இதயத்திற்கு வலிமையளிப்பதுடன் நெஞ்சில் சளி இருப்பின் அதனையும் அகற்றுகிறது.

மல்லிகை:-

மல்லிகை மலரின் மணத்திற்கு கண்பார்வையை கூர்மையாக்கும் சக்தி உண்டு.

ஜாதிப் பூ:-

இம்மலர்களை கண்களில் ஒற்றிவர கண்வலி குணமாகும்.

மகிழம்பூ:-

மகிழம்பூவின் மணத்தினுல் கண்நோய், தலைவலி, தலைப்பாரம் போன்றவை நீங்கிவிடும்.

தாழம்பூ:-

தாழம்பூவின் வாசனையால் பேன் வராமல் தடுக்கச் செய்யும். மேலும் இதயத்திற்கும் பலமேற்படுத்தி, உடலுக்கு வனப்பையும் அதிகரிக்கும்.

அகத்திப் பூ:-

அகத்திப்பூவை 35 கிராம் எடுத்து சுத்தமான நீர்விட்டலம்பி ஒரு ஆழாக்கு பசும்பாலில் வேகவைத்து சிறிது சர்க்கரை கூட்டிப் பருகிவர சிகரெட் புகையால் உண்டான உஷ்ணத்தையும், பித்தத்தையும், தேக அழலையும் நீக்கும்.

ஆவாரம் பூ:-

ஆவாரம்பூவை உலர்த்தி ஒருவேளைக்கு 15 கிராம் எடுத்து, நீரில் போட்டு கஷாயமாக்கி பால், சர்க்கரை சேர்த்து காப்பிபோல பருகிவர. உட்சூடு, நீரிழிவு, நீர்க்கடுப்பு முதலிய நோய்கள் நீங்கும்.

மேலும் ஆவாரம்பூவை உலர்த்தி நலங்கு மாவுடன் கூட்டி உடலில் தேய்த்து ஸ்நானம் செய்துவர, கற்ருழை நாற்றம், உப்பு பூத்தல் முதலியன நீங்கி உடல் அழகு பெறும்.

இலுப்பைப் பூ:-

ஒரு தோலா இலுப்பைப்பூவை ஓர் ஆழாக்குப் பசும்பாலில் போட்டுக் காய்ச்சி தினம் ஒருவேளை பருகிவர தாதுவிருத்தியை உண்டாக்கும்.

மேலும் இது சுரத்தையும், தாகத்தையும் நீக்கும்.

கருஞ்செம்பைப் பூ:-

இந்தப் பூவையும் நல்லெண்ணையையும் சேர்த்துக்காய்ச்சி ஸ்நானம் செய்துவர சிரசிலேற்பட்ட சீதளத்தைக்கண்டிக்கும் தலைபாரம், தலைவலி கழுத்து நரம்பின் இழுப்பு, வலி முதலியவற்றை நீக்கிவிடும்.

குங்குமப் பூ:-

குங்குமப்பூவைக் கருவுற்ற பெண்கள் ஒரு வேளைக்கு அரை முதல் 1 குன்றி எடை தாம்பூலத்துடன் அல்லது இரவு உறங்கச் செல்லும் போது பசும்பாலிலேனும் போட்டுக் காய்ச்சிக் குடித்துவர, சீதள சம்பந்தமான பிணிகள் அணுகாமல் காப்பதுடன், பிறக்கின்ற குழந்தை நல்ல சிவந்த நிறத்துடனும், திடகாத்திரமாகவும் இருக்கும். (தொடரும்)

ஆசிரியரும், வெளியிடுபவரும்,
வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர் R.M.P.
19, அருளாம்பாள் வீதி, தி. நகர், சென்னை-17.
நிர்வாக ஆசிரியர்: க. வேங்கடேசன், எம். ஏ.,
அச்சிடுவோர்: மூலிகை மணி அச்சகம், 9, கிளப் ரோட் கிழக்கு,
செனுய்நகர், சென்னை-600 030.

Printed by K. Babu, D.M.E. at Mooligai Mani Press, Madras-30 Edited & Published by Dr. A.R. Kannappar 19, Arulambal St., T. Nagar, Madras-17.